அரசியல், சமூக, பொருளாதார இதழ்

# எழுநிலம்

மாத இதழ் | மணம் 12 | மே 2022 | திருவள்ளுவர் ஆண்டு 2053



## வலி சுமந்த முள்ளிவாய்க்கால்!!

## கைதியின் இரவு!!

## 'புத்த தேவா!' எங்களை மன்னிப்பாயா?

## எத்தனை காலந்தான் ஏமாற்றுவார்?

அகவை 2 இல் கால் தடம்

செம்மாள்



# வரலாற்றுச் சாட்சியாய் நந்திக் கடல்!!

அன்று போலவே இன்றும்
அமைதியாய் ஆழமாய்.
புரியாத புதிரான
ஒரு வரலாற்றுச் சாட்சி
நந்திக் கடல்!!

குண்டுப் பிரளயம்
எறிகணை மழை.
வானிலிருந்து
எரிகணை வடிவில்
எமன் எம்மைத் துரத்தினான்!

சொந்தக் கைகளைக்கூடப்
பார்க்க முடியாது
பார்வைப் படலத்தை மறைக்கும்
புகை மண்டலம்!
அருகில் இருப்பவர் யாரெனத்
தெரியாது. கந்தக நாற்றம்.!!
குருதிக் குழம்பும்
சிதறிய உடலமும்
சேர்ந்த வாடை
அதையும் மேவும்.!!

இடைவிடாக் குண்டுமழை!!
கிழிந்த செவிப்பறை!
ஆனாலும் ஏன்?.
ஈனஸ்வரத்தில் முனகும்
குரல்கள்.!
ஆவி பிரியும் போது
எழும் பெருமூச்சு.
கைக் குழந்தையைக்
கிள்ளிச் சென்ற
'ஷெல்' லைத் தாண்டிய
அம்மாவின் அவலக்குரல்!!
இன்னமும் என்காதில்
ஏன்
தெளிவாய்க் கேட்கிறது?
ஒரு வேளை கஞ்சிக்காய்
கலயத்துடன் காத்திருந்த
பிஞ்சுக் குழந்தைகளின்
மரணம்
அது சொல்லொணாத்
துயரம்!!
அங்கங்கள் சிதறி
அம்மா இறந்தது
மார்பைச் சப்பிய
மழலைக்குத் தெரியாது!!
அந்தப் பச்சைப்
பிள்ளையின் பரிதாப முகம்.
எப்போதும் என்நினைவில்!!

காணும் இடமெல்லாம்
காயப்பட்டோர்..,
குவிந்து கிடக்கும்
பிணக் குவியல்
தண்ணீருக்கும் தவிக்கும்
அவலம்!!
'பங்கர்' பலருக்குக்
கல்லறையானது!!

அத்தனை இடரிலும்
எம்மைக் காக்கும்
'இதய தெய்வங்கள்'
இறுதி வரைக்கும்
எம்மோடிருந்தனர்.!!
பசி, தாகம் மறந்தனர்,
கண் துஞ்சாது காவல் இருந்தனர்!!
காயம் பட்ட - தம்
அவயவம் மறைத்து
மருத்துவ சேவையை
எமக்குத் தந்தனர்!!

ஆனந்தபுரத்தில் - எங்கள்
ஆனந்தம் மட்டுமா
தொலைந்து போனது? - பெரு
விருட்சமாய் வளர்ந்து
அரணாய்க் காத்த
காவலரும் அல்லவா
காணாமற் போயினர்??

வருடங்கள் நீண்டு 13 ஆயினும்
விமான இரைச்சல்.
கணப்பொழுது
இதயம் நின்று. பின் துடிக்கும்..

எங்களுக்காக தங்களைத் தந்த
காவலரண்கள்.!
தேசத்தின் விடுதலைக்காய்
தேகம் கொடுத்தோர்..!
அவர்கள்
கட்டிக் காத்த குழந்தைகள்,
முதியவர், அம்மாக்கள், அப்பாக்கள்
அண்ணாக்கள் அக்காமார்
தம்பி. தங்கைகள்.. - என்று
கொன்று குவித்த
அத்தனை தேசமும்
அழிந்து போகட்டும்!!
பாதகத்திற்குத் துணைநின்ற
அத்தனை நாடும்
பற்றி எரியட்டும்!!

எம்மைக் கொன்றோரின் தேசத்தில்
கலவரத் திருவிழா!!
எரிபொருள் இல்லாமலே - பற்றி
எரியும் வயிறுகள்!
கண்ணீர்க் குண்டுகள், வன்முறைகள்
வீதிவீதியாய் ஆர்ப்பாட்டங்கள்!

அத்தனைக்கும் சாட்சி
அன்று போலவே.. இன்றும்
மௌனமாய்.. அமைதியாய்
வரலாற்றுச் சாட்சியாய்
நந்திக் கடல்!!!

மாத இதழ் | மணம்: 12
மே
தொடர்புகளுக்கு:-
ezhunilam@yahoo.com
www.ezhunilam.com

## உள்ளடக்கம்...


| | |
|---|---|
| ஆசிரியர் கருத்து... | 03 |
| வலி சுமந்த முள்ளிவாய்க்கால்.. | 06 |
| எத்தனை காலந்தான் ஏமாற்றுவார்..? | 09 |
| அவசரகாலச் சட்டம் | 11 |
| நினைவழியா நினைவுகள் | 12 |
| வார்த்தைகளும் அர்த்தங்களும் | 14 |
| 'புத்த தேவா!' எங்களை மன்னிப்பாயா? | 16 |
| சிறிலங்காவின் அரசியலமைப்புகள் | 19 |
| கைதியின் இரவு!! | 22 |
| கவிதைகள் | 25 |
| நினைவழியாப் பதிவு | 26 |
| கட்டற்ற இணையவழியும் தடுமாறும்... | 28 |
| பொருளாதார நெருக்கடியும்... | 30 |
| வங்கம் தந்த பாடம் | 32 |




## திருக்குறள்

**குறள் 516:**

"செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோ
டெய்த உணர்ந்து செயல்"

**விளக்க உரை:**

செய்கின்றவனுடைய தன்மையை ஆராய்ந்து, செயலின் தன்மையையும் ஆராய்ந்து, தக்கக் காலத்தோடு பொருந்துமாறு உணர்ந்து செய்விக்க வேண்டும்.















‘நாட்டுப்பற்றாளர் நாள்’ பற்றி அழகாக எழுதியிருக்கிறீர்கள். படம் மட்டும் சுமார்தான்.

‘மீண்டும் ஒரு பெருவெடிப்பு’ கவிதை அருமையிலும் அருமை. மனம் நிறைந்த வாழ்த்துக்கள்.

**புனிதன் தாயகம்**

உலக வரலாற்றில் ஈழப் பெண்கள் பெண்களின் வளர்ச்சியை மட்டுமல்லாது சமுதாயத்தில் அவர்கள் படும் அவலங்களையும் வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது கட்டுரை.

இதுபோல சமுதாயத்தில் புரையோடிப் போயுள்ள அத்தனை அவலங்களையும் நீங்கள் வெளிக்கொணர வேண்டும்.

**திருச்செல்வம் மாறன்**
**பேர்லின், ஜேர்மனி**

இம்முறை பத்திரிகை சுமார்தான். ஆகா, ஓகோ என்று சொல்ல முடியவில்லை. கதை மிகவும் பிடித்திருந்தது. ரூபிணியிடம் மட்டுமல்ல, இந்த எழுத்தாளரிடமும் திறமைகள் ஒளிந்து கிடக்கின்றன.

அரசியல் தொடர்பான கட்டுரைகளும் சமகால நிலையை எடுத்துச் சொல்கின்றன. பணிகள் தொடரட்டும்.

**உதயா நவீனன்**
**கலிபோர்னியா**

பத்திரிகையை தொடர்ந்து வாசிப்பவர்களில் நானும் ஒருத்தி. ஒரு வருடம் முடியப் போகிறதே, பெண்களால் நடத்தப்படும் ஒரு சமுதாயப் பத்திரிகை நின்று விடுமோ என்ற ஐயமிருந்தது.

நடத்துபவர்களுக்கு உண்மையிலேயே நன்றி சொல்ல வேண்டும். சமுதாயப் பிரச்சனைகளை, குறிப்பாக தாயகப் பிரச்சனைகளை வெளிக்கொணர்ந்து, அடுத்த ஆண்டில் இன்னுமின்னும் வளர்ச்சி பெற மனமார வாழ்த்துகிறோம்.

**ஆனந்தி சற்குணநாதன்**
**பரிஸ்**

எங்களுக்குப் பிடித்தமான பத்திரிகை. இலகுவான எழுத்து நடை.

புதிய எழுத்தாளர்களை, குறிப்பாக இளைய தலைமுறையினரையும் உள்வாங்கி உங்கள் பத்திரிகை வீறுநடை போட வேண்டும் என்பது எங்கள் விருப்பம். எங்கள் பத்திரிகை என்று சொல்லும்படி வளர வேண்டும். எங்கள் ஆசிகள்.

**காசிநாதன் குடும்பத்தினர்**
**நெதர்லாந்து**

அரசியல், சமூக, பொருளாதார இதழ்
எழுநிலம்

கவிதைகள் எனக்கு மிகவும் பிடித்திருந்தன. இம்முறை வந்த ‘பெண்ணியம் சிந்தனைகள்’ வித்தியாசமாக நன்றாக வந்திருக்கிறது.

‘எல்லா நாளும் பெண்கள் நாளே’ ஒரு வித்தியாசமான கண்ணோட்டம் மட்டுமல்ல, யோசித்துப் பார்த்தால் அதுதான் உண்மையும் கூட. சிறப்பு.

**கா. அன்புச்செல்வன்**
**ஆம்ஸ்ரடாம்**

பத்திரிகை தாமதமாக வந்திருக்கிறது. ஆனாலும் ஆக்கங்கள் நன்றாயிருக்கின்றன.

பத்திரிகையை மாதம் ஒருமுறை விடுவீர்களா? எங்களுக்காக உயிரைக் கொடுத்தவர்களைப் பற்றி வாசிக்கும் போது கண்ணீர் வருகிறது. ராஜபக்சர்கள் பற்றிய அரசியற் கட்டுரை ஒரு தெளிவைத் தருகிறது.

**காந்தன்**
**மெல்போண்,**
**அவுஸ்திரேலியா**

இம்முறை ‘வரலாற்றில் ஒரு நாள்’ பொதுவாக எழுதப்பட்டிருந்தாலும் உள்ளடக்கம் நன்று. ‘இது கண்ணகிகள் காலம்’ நன்று.

புதிய புதிய எழுத்தாளர்கள் வரும்போது வித்தியாசமான எழுத்தாக்கங்கள் வருவது அருமையாக இருக்கிறது. வாழ்த்துக்கள்.

**சிபி குலேந்திரன்**
**மொன்றியல்**



# விறுவிறுப்பாகும் கொழும்பு அரசியல்

## ஆசிரியர் பக்கம்

12/05/2022 இன் மாலைப்பொழுதில், ஆறாவது தடவையாகப் பிரதமராகி இருக்கிறார் 73 வயதான திரு ரணில் விக்கிரமசிங்க. மூழ்கிக் கொண்டிருக்கும் இலங்கையின் சகல பிரச்சனைகளையும் தீர்க்கவல்ல சர்வரோக நிவாரணியாக ரணிலைக் காட்ட பகீரதப் பிரயத்தனம் எடுத்திருக்கிறார் கோத்தா. கட்சி படுதோல்வியடைந்த நிலையில், தனியனாக, தேசியப் பட்டியலில் இருந்து நியமனப் பாராளுமன்ற உறுப்பினராக பதவி கிடைக்கப்பெற்ற ஒருவர் மற்றவர்களை ஓரங்கட்டி பிரதமராவது உலகில் நடைபெறாத ஒன்று. இது எப்படி என்று எவரும் தலையைப் பிய்த்துக் கொள்ள வேண்டியதில்லை. தன்மீது எவர் என்ன சேற்றை வாரி இறைத்தாலும் வழித்துத் துடைத் தெறிந்து விட்டு, தனது கருமமே கண்ணாக வாளாவிருந்ததன் மூலம் எல்லோருடனும் ஒத்துப் போகக் கூடியவர் என்ற பெயர் பெற்றிருந்தவர் ரணில்.

ரணிலின் மீள்வருகையை அடுத்து இந்தியா, சீனா, யப்பான், அமெரிக்கா.... என்று உதவிகள் வந்து குவியத் தொடங்கி விட்டனவாம். கப்பல்களும் துறைமுகத்துக்கு வெளியே காத்துக் கிடப்பதாக செய்திகள் வந்த வண்ணம் உள்ளன. இவற்றில் உண்மை இல்லாமலும் இல்லை. உதவிகள் கிடைத்திருக்கின்றன, இன்னமும் கிடைக்கும். IMF கூட நிதி வழங்குவது தொடர்பான இறுதித் தீர்மானத்திற்கு வந்திருக்கலாம். இவையனைத்தும் 'யானைப் பசிக்கு சோளப்பொரி' தான். பதவிக்கு வந்தகையுடனே மக்களுக்கு மூன்று வேளையும் சாப்பாடு போடப்போவதாக ஒரு அறிக்கைவிட்டு ரணில் அடித்தார் பாருங்கள் ஒரு நகைச்சுவை, இதைவிட மேலும் மக்களைப் புண்படுத்த முடியாது. முதல் ஐந்து தடவைகளும் என்ன செய்து கொண்டிருந்தார் என்ற கேள்வி உங்களுக்கும் எழும்.. எழ வேண்டும்.

உதவித்தொகைகள் என்பன அன்பளிப்புகளல்ல. எல்லாமே மீளச் செலுத்த வேண்டிய கடன்கள்தான். வங்குரோத்து நிலைமைக்கு வந்திருக்கும் ஒரு நாடு தன்னை மறுசீரமைக்க எந்த வழிவகைகளையும் செய்யாமல், கடனுக்கு மேல் கடனை வாங்கிக் குவித்துக் கொண்டிருக்கிறது. இலங்கையின் மொத்த உற்பத்தித் திறனின் பெறுமதியை விட மீளச் செலுத்த வேண்டிய கடன் வீதம் 104% ஆக மிக உயர்ந்து நிற்கிறது. அரசின் வருமானத்தின் 95% இற்கும் மேலான பகுதி மீளச் செலுத்த வேண்டிய கடனிலேயே கழிந்து போகிறது. அந்நிய செலாவணி கையிருப்பில் இல்லை. இதனால் இறக்குமதி செய்யப் பணமில்லை. அரச உத்தியோகத்தவர்க்குத் தரப் பணப்பற்றாக்குறை. பணத்தை அச்சிட்டுத் தள்ளுகிறது இலங்கை. வரலாறு காணாத பணவீக்கம் மக்களை தெருவில் போராடக் கொண்டுவந்துவிட்டது. மேலும் அதிகரிக்கும் கடன்சுமை மக்கள் தலைமீதே ஏறி உட்காரப் போகிறது. முழுமையான கட்டமைப்பை மாற்றாமல் 'பழைய மொந்தையில் இன்னும் பழைய கள்' என்பதுபோல ஒரு கோமாளியை மாற்றி அந்த இடத்திற்கு இன்னொரு கோமாளியைக் கொண்டு வந்ததன் மூலம் மக்களுக்கு எந்தத் தீர்வும் எட்டப் போவதில்லை.

இந்த ஆட்சியின் போக்கினை முழுவதுமாக நம்பிவிடாமல், இலங்கையின் போக்கை அதிகாரவர்க்க நாடுகள் உன்னிப்பாக அவதானித்துக் கொண்டு இருக்கின்றன. கடந்த காலத்தில், அமெரிக்கத் துணையுடன் இரண்டு தடவைகள் 'ஜே.வி.பி.' உறுப்பினர்களை அடக்கி, அழித்தொழித்தது இலங்கை. இப்போது இலங்கைக்கான அமெரிக்க உயர்ஸ்தானிகர், 'ஜே.வி.பி.' யினரைச் சந்தித்துக் கதைத்தது அவர்களின் நடவடிக்கைகளையும் உன்னிப்பாக அவதானிக்கிறார்கள் என்பதைப் புலனாக்குகிறது. பதவியேற்றவுடன் ரணில் இந்தியாவுக்குப் போகவிருக்கிறார். நன்றிக்கடனைத் தீர்ப்பதற்காகவும் இருக்கலாம். மே 18 அன்று புலிகள் தாக்கப் போகிறார்கள் என்ற புரளி இந்தியப் பத்திரிகையில் வந்ததன் பின்னணியில் மக்கள் போராட்டத்தை திசைதிருப்பி ரணிலுக்கு ஆதரவு பெருகச் செய்வதற்கான ஒரு சூழ்ச்சியாகவும் இருக்கக்கூடும்.

இந்தியா, சீனா, அமெரிக்கா, யப்பான் என்று எந்த நாடு இலங்கையினுள் நுழைய முற்பட்டாலும் அது அவர்களின் சுய தேவைக்காக மட்டுமே. வீதியில் இறங்கிய மக்கள்தான் தமது பிரச்சனைக்கு ஒரு முடிவைக் கொண்டுவர வேண்டும். அரசியற் கட்டமைப்பு முழுமையாக மாற்றப்பட வேண்டும். அரசுக்கட்டில் தொங்கிக் கொண்டிருக்கும் ஒடுக்குமுறை வன்முறையாளராக இருக்கும் இந்தக் கும்பல் முற்றாக அரசியலிலிருந்து அகற்றப்பட வேண்டும். அரச அதிபருக்குள்ள அபரிமிதமான அதிகாரங்கள் கட்டுப்படுத்தப்படவேண்டும். குற்றவாளிகளைப் பாதுகாக்கும் அரசியல்வாதிகளும் குற்றவாளிகளுடன் சேர்த்துத் தண்டிக்கப்பட வேண்டும், உள்நாட்டு உற்பத்தியில் ஒரு புரட்சியைக் கொண்டுவர வேண்டும்.. இப்படி மறுசீரமைக்க வேண்டியவை ஏராளமாக இருக்கின்றன. அவற்றைக் கருத்தில் எடுக்காமல் அமைச்சரவை மாற்றம் மட்டும் நிகழும்போது, மக்கள் வீதிகளிலேயே இருக்க வேண்டியதுதான்.



அமுதுபவா

# வலி சுமந்த முள்ளிவாய்க்கால்!!

மறக்க முடியாத நினைவலைகளோடு, தினம் தினம் போராடும் மனதை சமப்படுத்த முடியாமல் தவிக்கும் தவிப்பு யாருக்குப் புரியும். இம் மாதம் தமிழர் வரலாற்றில் மறக்க முடியாத தமிழ் இனவழிப்பு மாதம்.

நான் இவ் இடப்பெயர்வின் போது நிறைய வலிகளைச் சந்தித்துள்ளேன். இதில் நான் இராணுவத்திடம் சரணடைந்ததில் இருந்து செட்டிகுளம் முகாம் வரை சென்ற கதையைக் கூறுகின்றேன். இவை எல்லாம் வாழ்வில் மறக்க முடியாத வலி தந்த காலங்கள். நான் 2008 யூலை மாதம் 14ம் திகதி யென நினைக்கிறேன் இடம்பெயரத் தொடங்கியது. ஆனால் இடைப்பட்ட காலக்கதையைக் கூறாமல் 2009 ஏப்ரல் 19 திகதி சரணடைய சென்றதில் இருந்து இதைத் தொடர்கிறேன்... நானும் எனது இரு பிள்ளைகளுமாக, வேறு சிலருடன் சேர்ந்து இரவு மாத்தளன் கடற்கரையிலுள்ள தடுப்பணையைச் சென்றடைந்தோம். நானும் எனது பிள்ளைகளும், மண் தடுப்பணையில் காணப்பட்ட முள்வேலியில் செருகப்பட்டிருந்த ஓலையை இழுத்து, முட்கம்பியை உயர்த்தினோம். பிள்ளைகள் இருவரையும் உள்ளே தள்ளி நானும் குதித்தேன். நாம் குதித்த இடம் மண்ணணைக்கு மண் வெட்டிய குழி போல மிக ஆழமாக இருந்தது. என் பிள்ளைகள் தாண்டு கொண்டிருந்தார்கள். ஒருகணத்தில் நான் இருவரையும் உயர்த்தி விட்டு, நானும் பிள்ளைகள் உதவியுடன் மேலேறினேன்.



எங்களின் சொத்தாக பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களும், ஒரு அல்பம், ஒரு மாற்றுடை.... இவை கொண்ட ஒரு ‘பண் பை’எனப்படும் ஒரு சிறிய பை. இவைதான் எங்கள் சொத்து.. பிள்ளைகளுக்கு மார்பளவு தண்ணியும், எனக்கு இடுப்பளவுமாக காணப்பட்ட அந்த நந்திக்கடலேரியில் நடந்து கொண்டிருந்தோம்.

அதன் போது நான் கண்ட காட்சிகள் மறக்கக் கூடியவை அல்ல. நீரேரியில் சில உடல்கள் மிதப்பது இருளிலும் தெரிந்தது. ஏனெனில், இருட்டில் தட்டுத் தடுமாறி நடக்கும்போது அவ் உடலங்களில் தட்டுப்பட்டே நடந்தோம். மக்கள் அழுகையொலியோடு தம் உறவுகளைத் தேடித் தேடி கூப்பிட்டபடி வந்தனர். கிட்டதட்ட ஒருமணி நேரம் நடந்தோம். அங்கு ஒரு சிறிய நிலப்பகுதி முட்கம்பிகளால் சுற்றப்பட்டு ஒரு வழிப்பாதையாக, உள்நுழைய ஏதுவாக அமைக்கப்பட்டிருந்தது.

இராணுவத்திடம் சரணடையப் போகிறோமே.... என்ன நடக்குமோ.... எனத் தெரியாது துடிக்கும் இதயத்துடன், இருளடைந்த முகத்துடன், பிள்ளைகள் இருவரும் பயத்தால் என்னைக் கட்டிப்பிடித்தபடி நின்றிருந்தனர். நான் மட்டுமல்ல,

# வலி சுமந்த முள்ளிவாய்க்கால்!!

அங்கு நின்றவர்களும் படபடப்போடுதான் நின்றிருந்தார்கள். ‘‘மிகவும் மோசமான எறிகணை, பீரங்கி, விமானக்குண்டு வீச்சில் உறவுகளைத் தொலைத்து....’’ அவயங்களை இழந்த உறவுகளை தோளில் சுமந்தபடி நடைப்பிணமாக நின்றிருந்தோம். இதனை அனுபவித்தவர்களுக்கு மட்டுமே புரியும். என்னால் கோர்த்து அந்நிலையை எழுத வார்த்தைகள் வரவில்லை. கைகள் நடுங்க, கண்களை மூடியபடி என்னை சுதாகரித்துக் கொண்டு தொடர்கிறேன்.

> **எந்த வித உடுப்புமில்லாமல் முழு நிர்வாணமாக நிற்க வைத்து சோதனையிட்டார்கள். நாம் அன்றே எம் தன்மானத்தை இழந்து விட்டோம். பிள்ளைகள் எதிரே பெற்றவர்கள் நிர்வாணமாக. பெற்றவர் எதிரே பிள்ளைகள் நிர்வாணமாக நாம் அதற்கு கூச்சப்பட்ட போது, எம்மை அடித்துக் கழற்றினார்கள். அது முடிந்து வெளியே வர, எனது மகனையும், மகளையும் முதல் பஸ்சில் ஏற்றிவிட்டார்கள். நான் அடுத்த பஸ்சில். போய் எனது பிள்ளைகளைக் காணும் வரை என் உயிர் என்னிடமில்லை.**

அங்கிருந்த ஆயிரக் கணக்கானவர்களோடு நாங்களும் நனைந்த உடைகளோடு நின்றிருந்தோம். அங்கே நின்ற இராணுவத்தினர் எம்மை ஏளனமாக ‘‘கடைசியில எங்க கிட்டவந் தீங்களா....??’’ என எக்காளமாய் ஏதோ வேற்றுக் கிரகவாசியைப் பார்ப்பது போலப் பார்த்தனர். நிச்சயமாக என்னால் அப்போதய மன உணர்வை சொல்ல முடியாது.

சிறிது நேரத்தில், அவர்கள் சிறு குழந்தைகளுடன் நின்றவர் களை கூப்பிட்டார்கள். அதன் பின் சிறுவர்கள், வயோதிபர்கள், இளைஞர், யுவதிகள் என வகைப்படுத்தி, உள்ளே எடுத்து, தலை முதல் கால்வரை தடவிப்பார்த்தனர். அந்த சிறு நிலப்பரப்பில் நாம் ஈர உடுப்புடன் உட்கார வைக்கப்பட்டோம். குழந்தைகளின் அழு குரலும், இருமல் ஒலியும் தவிர வேறு எதுவும் கேட்கவில்லை.

இருண்டு நீண்டுகிடந்த இரவைப்போலவே, எங்கள் வாழ்க் கையும் இருண்டு போய் இருந்தது. விடியும் பொழுதில் மீண்டும் குடும்பம் குடும்பமாக வரிசையாக நிற்க வைத்து, மீண்டும் எம்மை ‘செக்கிங்’ என்ற பெயரில் தடவி, வெளியே விட்டார்கள். அது பெரியவெளி. அதிலிருந்து இரண்டு மைல்கள் நடக்க வேண்டி இருந்தது. இயலாதவர்களையும், காயப் பட்டவர்களையும் உழவு இயந்திரப் பெட்டியில் ஏற்றி அனுப்பினார்கள். நானும் பிள்ளைக ளும், மற்றவர்களுடன் நடந்து சென்றோம். ஒருவர் முகத்திலும் சந்தோஷம் காணப்படவில்லை. மிகவும் பயந்தபடியே நடந்தோம்.

இராணுவ வாகனங்கள்..... இராணுவத்தினர் வெற்றிக் கதாநாய கர்கள் போல அங்குமிங்கும் நடந்து செல்கையில் மனம் கொதித் துப் போனது. ஆங்காங்கு காணப்பட்ட சிறுகுட்டைகளில் முகம் கழுவி, உடைகளில் இருந்த சேறையும் கழுவிக் கொண்டோம். மீண்டும் ஒரு இடைத்தங்கல் முகாம் போல ஒன்றில் அமர்த்தப் பட்டோம். அங்கே நின்ற ஒருவன் [ஊடகவியலாளர்] எனது மகனை இழுத்து, ‘‘கொட்டியா நல்லமா?’’ நாங்க நல்லமா? எனக் கேட்டான். என் மகன் ‘‘புலிமாமா நல்லம்’’.... என்று சொல்லி விடுவானோ? என எண்ணிய போது என் உயிரே போய்விட்டது. எனது மகன்.... எறிகணை வீச்சின் போது ஒரு பெண்ணின் தலை துண்டாகி வேப்பமரத்தில் தொங்கியதை பார்த்த நாளிலிருந்து அவன் பேசுவதில்லை. எனவே நான் அவனுக்குப் பேச வராது என சைகை மூலம் சொன்னேன். விட்டு விட்டார்கள்.

பின் ஒரு மணியளவில் எங்களுக்கு தெருநாய்களுக்கு எறிவது போல பாண் தந்தார்கள். பின் மீண்டும் எம்மை பஸ்சில் அழைத்துச் செல்லப் போவதாக கூறி வரிசையில் நிற்க வைத்தார்கள். ஆண் கள், பெண்கள் என வகைப்படுத்தினார்கள். மகனை ஆண்கள் வரி சையில் நிற்க வைத்தார்கள்.இங்கு எம்மை எந்த வித உடுப்புமில் லாமல் முழு நிர்வாணமாக நிற்க வைத்து சோதனையிட்டார்கள். நாம் அன்றே எம் தன்மானத்தை இழந்து விட்டோம். பிள்ளைகள் எதிரே பெற்றவர்கள் நிர்வாணமாக. பெற்றவர் எதிரே பிள்ளைகள் நிர்வாணமாக நாம் அதற்கு கூச்சப்பட்ட போது, எம்மை அடித்துக் கழற்றினார்கள். அது முடிந்து வெளியே வர, எனது மகனையும், மகளையும் முதல் பஸ்சில் ஏற்றிவிட்டார்கள்.





நான் அடுத்த பஸ்சில் போய் எனது பிள்ளைகளைக் காணும் வரை என் உயிர் என்னிடமில்லை.

இந்த உணர்வுகளை எழுத முடியவில்லை. அன்று அங்கு இந்த சூழலில் நின்றவர்களை கேட்டால் தெரியும். தேவிபுரத்திலுள்ள பாடசாலையொன்றில் பஸ் நிறுத்தப்பட்டு இறக்கப்பட்டோம். தாய்ப்பறவையைத் தேடி ஓடிவரும் குஞ்சுகள் போல இருவரும் ஓடி வந்து எனைக் கட்டிக் கொண்டனர். இங்கு மீண்டும் தரப்படுத்தல்.. ‘தமிழ் பேசும் துரோகக்கும்பல்’ தலைமையில் நடைபெற்றது. அங்கே இயக்கம், எல்லைப்படை, மாவீரர், போராளிகுடும்பம், உதவியவர்கள் என வகைப்படுத்தி. சந்தேகப்பட்டவர்களைப் பிடித்து வைத்து மற்றவர்களை பஸ்சில் ஏறும்படி கட்டளையிட்டார்கள்.

அங்கு மீண்டும் அழுகைகள். பிள்ளைகளை விட்டு எப்படி பெற்றவர்கள் வர முடியும்? ஆனாலும் துப்பாக்கி முனையில் பஸ்சில் நாம் ஏற்றப்பட்டோம். மீண்டும் பயணம். இரவு எட்டு மணிபோல கிளிநொச்சி பழைய ஆஸ்பத்திரியில் இறக்கி விடப்பட்டோம். அங்கு எமக்கு இரவு உணவு வழங்கப்பட்டது. எமது ஆடைகள் ஈரப்பற்று காய்ந்து, நாமும் குளிக்காததாலோ என்னவோ அவர்கள் எல்லாரும் முகக்கவசம் அணிந்தே பொட்டலங்களைத் தூக்கிப் போட்டார்கள். அங்கே இரவு தங்க வைக்கப்பட்டோம். எம்மால் மலசலம் கழிக்கக்கூட போக முடியாத நிலை. நரக வாழ்வின் உச்சக்கட்டம். ஒருவாறு மலசலகூடத்தில் நுழைந்து வெளிவர விடிந்து விட்டது. மீண்டும் காலை ஆறு மணியளவில் பஸ்சில் ஏற்றப்பட்டோம். கண்டி வீதியில் சென்றது பஸ். எங்கு போகிறோம் எனத் தெரியவில்லை. வவுனியா போவதாக பேசிக்கொண்டார்கள். வவுனியாவை மதியம் வந்தடைந்தோம். அங்கு ஒரு மைதானத்தில் இறக்கி விட்டார்கள். பின் மீண்டும் அங்கு தரப்படுத்தப்பட்டு, போராளிகள் தனி பஸ்சில் ஏற்றப்பட்டார்கள். அங்கு நின்றவர்களைப் பார்த்து ஒருவன் ஒலி பெருக்கியில் சொன்னான், ‘இங்கு இருப்பவர்கள் எல்லாரும் புலி ஆதரவாளர்கள் என்று தெரியும். நீங்கள் புலிகளுக்கு என்ன செய்தீங்க? உள்ளதை சொல்லுங்க.

நாங்களா அறிஞ்சா பிறகு என்ன நடக்கும் என்று சொல்ல ஏலாது என்று. என் முறை வந்தது. ‘‘நான் மெதுவாகச் சொன்னேன்,’’ எனக்கு கணவர் இல்லாத படியால என்னிடம் வருவதில்லை. சில வேளைகளில் ஞாயிறு சாப்பாட்டு பார்சல் கொடுப்பேன் என்றேன். என்னைப் பார்த்து, நானிருந்த கோலத்தையும் பிள்ளைகளையும் பார்த்துவிட்டு ‘போ!’ என்று சொன்னான். பின் பஸ்ஸில் ஏற்றி மீண்டும் தொலைதூரப் பயணமாகி, இரவு ஏழு மணிபோல ஒரு முகாமினுள் இறக்கி விடப்பட்டோம். அது செட்டிகுள அருணாச்சல முகாமாகும். இங்கே நடந்த கதையை பின்பு கூறுகிறேன்.

# முள்ளிவாய்க்காலின் அழியாத நினைவுச் சுவடுகளுடன்

*பதின்மூன்று ஆண்டுகள்.*
*ஓடிக் கடந்தன!!*
*பத்திரமாய்*
*பூட்டி வைத்திருக்கும்*
*இந்த நினைவுகளை*
*ஓட்டிக் கொண்டு தினமும்*
*ஏதோதோ நிகழ்வுகளை*
*மனம் படமாக ஓட்டிச் செல்கிறது..!!!*
*பதுங்கு குழிகள்.*
*கண்டாலே - என்*
*நெஞ்சுக்குழி அடைத்து நிற்கும். -ஏன்?*
*இங்கு தானே*
*எத்தனை ஆயிரம்*
*எம் சகோதர உறவுகள்*
*தொலைந்தன.. புதைந்தன*
*எத்தனை உயிர்களைத்*
*தின்று தீர்த்தனர்.!!*

*தாயற்ற சிசுக்கள்*
*பசியால் மட்டும் வாடவில்லை*
*அறுந்து தொலைந்த தாயுறவால்*
*இன்னமும் வாடிக்கொண்டிருக்கின்றன*
*தாய்மாரைத்*
*தேடிக் கொண்டிருக்கின்றன*
*அன்று தெறித்துப் பறந்த*
*குருதி எல்லாம்*
*முள்ளி மண்ணில் - இன்று*
*துடைத்து எறிந்தாலும்*
*மறைக்கப்பட்டாலும்.*
*மறுக்கப்பட்டாலும்.*
*புதைந்து இருக்கும்*
*ஒவ்வொருவர் உறவுகளும்*
*வலிகளைச் சொல்லும்.*
*உண்மையை*
*உரத்துச் சொல்லும்!!*

*இழந்து போன - எம்*
*உறவுச் செல்வங்களே.!!*
*உம்மை நாம்..*
*மறந்து போவோமா?*
*அந்த மண்ணில் வலி பெற்று*
*வடு மறைந்த போதும்*
*நினைவு மறக்காது*
*உமக்காக பிரார்த்திக்கிறேன்*
*உறவுகளே.!!*
*உங்கள் ஆத்மா*
*சாந்தி கொள்ளட்டும்.!!*



**ஜெ.செந்துஜா**



பாரி

# எத்தனை காலந்தான் ஏமாந்துவார்?

பொருளாதார சீர்குலைவினால், இயங்க முடியாமல் இருக்கும் இலங்கைத் தேசத்தில், மக்களின் வெறுப்பும் கையாலாகாத நிலையும் போராட்டங்களாகவும் கலவரங்களாகவும் கட்டுக்கடங்காமல் போய்க் கொண்டிருக்கின்றன. இலங்கையின் அரசுக்கட்டில் 6வது முறையாகப் பதவியேற்றிருக்கிறார் ரணில் விக்கிரமசிங்க. அவர் பதவியேற்ற கையுடன் காத்திருந்தது போல வாழ்த்துக்களைச் சொரிந்திருக்கின்றன அமெரிக்காவும் இந்தியாவும். இந்திய உயர்ஸ்தானிகர் ரணிலைச் சந்திக்கச் சென்றிருக்கிறார். இவற்றைப் பார்க்கும்போது, ரணிலின் பதவியேற்பின் பின்னால் அமெரிக்க, இந்திய உந்துதல் இருப்பது உறுதியாகிறது. இவை மகிந்தவை இறக்கி தமக்குச் சார்பான ரணிலைக் கொண்டு வரவா அல்லது கோத்தாவின் பதவியைத் தக்கவைக்கவா அல்லது வேறு ஏதாவதா என்பது விரைவில் வெளிச்சத்துக்கு வந்துவிடும்.

மிகவும் இக்கட்டான சூழ்நிலையில், ஒரு காப்பானாகப் பதவிப் பிரமாணம் செய்த ரணில் நாட்டைக் கைதூக்கி விடப் போகிறார் என்று கனவுகூடக் காணக்கூடாது. முதல் ஐந்து தடவைகளிலும் ஒரு தடவைகூட பதவிக்காலம் முடியும் வரை நிலைத்திருக்காதவர் ஆறாவது தடவையாக பதவியேற்றிருக்கிறார். முதல் ஐந்து தடவைகளிலும் ரணில் என்னவெல்லாம் செய்திருக்கிறார், நாட்டின் வீழ்ச்சியில் அவருக்கிருந்த பெரும்பங்கு என்ன என்பதை கொஞ்சம் விரிவாகப் பார்ப்போம்.

அவர் காலத்தில், மத்திய வங்கியைப் பிணையாக வைத்து நடந்த வர்த்தக மோசடியில் இலங்கை சுமார் 145 பில்லியன் ரூபாய்களை இழந்தது. அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள் தொடர்ச்சியாக நட்டமடைந்தன. 2018 இல் மட்டும் 42,364 மில்லியன் ரூபா நட்டமேற்பட்டது.

ரணிலுக்கும் ‘நல்லவர்’ மைத்திரிபாலவிற்கும் இடையில் நடைபெற்ற அரசியல், அதிகார, பதவிப் போட்டிகளினால், 2018 இல்



மட்டும், வெளிநாட்டு உதவியாகக் கிடைக்கும் ஒரு பில்லியன் அமெரிக்க டொலரை இலங்கை இழந்தது.

ராஜபக்ச குடும்ப உறுப்பினர்களின் ஊழலும், வெளிநாடுகளில் அவர்களால் பதுக்கப்பட்ட இரண்டு பில்லியன் பணம் தொடர்பான விபரங்களும் அம்பலப் படுத்தப்பட்ட பின்னரும் ரணில் மகராசன் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. பதிலாக, நீதிமன்றப் பொறிமுறைகளினூடாகவும் அரசின் தலையீடுகளின் மூலமும் காப்பாற்றப்பட்டனர் அந்தப் பெருச்சாளிகள்.

2015 – 2016 ஆண்டு காலப்பகுதியில், சுமார் 7436 மில்லியன் வரையான கடன் பழுவைச் சுமந்து கொண்டிருந்தது இலங்கை. மைத்திரி காலத்தில், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 757 ஆக இருந்த கடன்பழு, 2018 ரணில் காலத்தில் 777 ஆக உயர்ந்தது. இலங்கையின் வெளிநாட்டுக் கடன் முகாமைத்துவம்

தோல்வியிலிருந்து படுதோல்வியாகச் சரிய ரணிலும் ஒரு காரணம். போரினால் கடன்பட்டோம் என்கிறார்களே, 2008 இல் போர் உச்சக்கட்டத்தில் இருந்தபோது, வெறுமனே கடன் பழு 40% மட்டுமே இருந்ததை மக்களுக்குச் சொல்லத் தயங்கியது ஏன்?

2015 – 16 காலப்பகுதியில், இலங்கையில் உள்நாட்டுக் கடன் 12% ஆகவும், வெளிநாட்டுக் கடன் 25% ஆகவும் இருந்தது. ஊழல் பட்டியலில் உலகில் 12வது இடத்திலிருந்தது கௌரவ சிறிலங்கா. முன்பே சரியத் தொடங்கியிருந்த வெளிநாட்டு முதலீடுகளின் வீதம் 2018 காலப்பகுதியில் பெருவீழ்ச்சி கண்டது.

இவையெல்லாம் ஒருசில உதாரணங்கள் மட்டுமே. மகிந்தவுக்கும் ரணிலுக்கும் இடையில் பெரிய வேறுபாடில்லை. இவ்வளவு களேபரங்களுக்கு மத்தியிலும், இப்போதும் அவர்கள் திரைமறைவில் நல்லுறவுடன்தான் இருக்கிறார்கள். மகிந்தவும் ரணிலுக்கு வாழ்த்து தெரிவித்திருக்கிறார். ஏற்கனவே, மகிந்தவைக் காப்பாற்றும் நடவடிக்கைகளில் ரணில் இறங்கியிருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. கூட்டுக்களவாணிகள் தொடர்ந்தும் பதவியில் நிலைத்தால் மக்களின் வாழ்வில் மாற்றத்தை எதிர்பார்க்க முடியாது.

ரணில் அமைச்சரவையை உருவாக்கியதன் பின், இந்தியா விடமும் வேறு சில நாடுகளிடமும் இருந்து கொஞ்சக் கடன் கிடைக்கும், முக்கியமாக IMF கடன் கிடைக்க வாய்ப்புள்ளது. சொற்ப காலத்திற்கு எரிபொருள், மற்றும் பிற வசதிகள் கிடைக்க வாய்ப்பிருக்கும். பொருட்களின் விலை சற்றுக் குறையலாம். திரும்பவும் பழைய நிலைதான்.



ரணிலால் மக்களின் பிரச்சனைகளைத் தீர்க்கும் ஒரு தலைவனாக முடியாது. போராட்டங்கள் கலவரங்களைக் கட்டுப்படுத்தவும் மக்களையும் உலகையும் சாந்தப்படுத்தவும் போடப்பட்டுள்ள இந்த முகமூடி விரைவில் கிழிந்துவிடும்.

நாட்டை இந்த நிலைக்குத் தள்ளிய ஊழல் குற்றவாளிகள் மேல் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்து, அவர்கள் தண்டனைக்கு உள்ளாக்கப்பட வேண்டும். அவர்களின் சொத்துக்கள் பறிமுதலாக் கப்பட்டு அரசுடைமை ஆக்கப்பட வேண்டும். மக்களுக்குத் தீங்கான அதிகாரங்கள் அகற்றப்பட்டு அரசியலமைப்பில் ஒரு நியாயமான மாற்றம் கொண்டுவரப்பட வேண்டும். இனவாதம் ஒழிக்கப்பட்டு அரசியற் பழிவாங்கல்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். இப்படியான மாற்றங்கள் தென்பட்டால் மட்டுமே மக்களுக்கு நியாயம் கிடைக்கும் என நம்பலாம்.

**மகிந்தவுக்கும் ரணிலுக்கும் இடையில் பெரிய வேறுபாடில்லை. இவ்வளவு களேபரங்களுக்கு மத்தியிலும், இப்போதும் அவர்கள் திரைமறைவில் நல்லுறவுடன்தான் இருக்கிறார்கள். மகிந்தவும் ரணிலுக்கு வாழ்த்து தெரிவித்திருக்கிறார். ஏற்கனவே, மகிந்தவைக் காப்பாற்றும் நடவடிக்கைகளில் ரணில் இறங்கியிருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. கூட்டுக்களவாணிகள் தொடர்ந்தும் பதவியில் நிலைத்தால் மக்களின் வாழ்வில் மாற்றத்தை எதிர்பார்க்க முடியாது.**







# அவசரகாலச் சட்டம் என்றால் என்ன?

இயற்கை அனர்த்தம், தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல், பொருளாதாரப் பிரச்சனைகள் போன்ற காரணங்களால் நாட்டின் அமைதிக்குப் பங்கம் ஏற்படும் சந்தர்ப்பங்களில், சாதாரண சட்டங்கள் மூலம் அவற்றைச் சமாளிக்க முடியாத நிலை அரசாங்கத்துக்கு எழும்போது, அவற்றை எதிர் கொள்வதற்கான மேலதிக அடக்குமுறைச் சட்டமே அவசரகாலச் சட்டமாகும்.

உண்மையில் பொதுமக்கள் பாதுகாப்பு என்ற பெயரில் அரசைப் பாதுகாக்கும் சட்டமாகவே இது இருக்கின்றது. இலங்கையில் மட்டுமல்ல, உலகின் எந்த நாட்டிலும் அவசரகால நிலை செயற்படுத்தப்படும் நிலை எழக்கூடும்.

இலங்கையைப் பொறுத்தவரை, அவசரகாலச் சட்டத்தினால் எங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளைப் புரிந்து கொள்ள வேண்டுமானால் இந்தச் சட்டத்தினால் அரசுக்குக் கிடைக்கும் மேலதிக அதிகாரங்களைப் பற்றி நாம் தெரிந்திருக்க வேண்டும்.

நாட்டின் பாதுகாப்புக் கடமையிலுள்ள பொலிஸ், விசேட அதிரடிப்படை மற்றும் முப்படைகளின் உறுப்பினர்களுக்கு யாரையும், எந்த நேரத்திலும் கைது செய்வதற்கான அதிகாரம் கிடைக்கும். கைதுக்கு முன்னான விசாரணை, பின்னான விசாரணை என்ற பேச்சுக்கே இடமில்லை. எந்த வழியிலும் கைது செய்வதற்கான முழு அதிகாரமும் உண்டு.

கைது செய்ய எத்தனிக்கும் போது, தப்பிக்க முயன்றால் அல்லது தப்பிக்க முயன்றார்கள் என்ற குற்றச்சாட்டின் பெயரில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்வதற்கான முழு அதிகாரமும் அவர்களுக்குக் கிடைக்கும்.

ஒருவரை சந்தேக நபராகக் கருதுவதற்கான முடிவெடுக்கும் அதிகாரம், கடமையிலுள்ள எந்தவொரு ஆயுதம் தரித்த பாதுகாப்பு உத்தியோகத்தருக்கும் உண்டு.

இலங்கையைப் பொறுத்தவரை, விசாரணைகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டும் என்ற கட்டாயம் எதுவுமில்லை. தேவை ஏற்படின், பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கையின் கீழ் வைத்து விசாரிக்கும் அதிகாரம் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினர்க்கு உள்ளது.

நீண்டகாலமாக, விசாரணைகள் எதுவுமே இல்லாமல் சிறைகளில் வாடும் தமிழ் அரசியற் கைதிகள் இந்த அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப் பட்டவர்கள் என்பதும், இன்றுவரை அவர்களுக்குத் தீர்வெதுவும் கிடைக்கவில்லை என்பதும் குறிப்பிடத் தக்கது. காணாமற் போனோர் காணாமல் ஆக்கப்பட்டதின் பின்னாலும் இந்த அவசரகாலச் சட்டமே உள்ளது.





# நினைவழியா நினைவுகள்

யாழ்ப்பாணக் கோட்டை வீழ்ச்சியுற்றதன் பின், அதைச் சூழவிருந்த மக்கள் கொல்லப்படும் வீதம் ஓரளவுக் குக் குறைந்திருந்தது. இராணுத்தினர் முகாம்களை விட்டு வெளியேறி அடாவடித்தனங்கள் செய்ய முடியாதவாறு முகாம்களைச் சுற்றி கடுமையான காவலிருந்தது. அதனை எப்படியாவது உடைத்து, வெளியேற வேண்டும் என்று அவர் கள் எத்தனிப்பதும், அதற்குக் கடுமையான எதிர் வினையுமாக ஒரு இளைய தலைமுறை உயிரைக் கொடுத்துக் காத்துக் கொண்டிருந்த வேளை.

அது 1991–1993 காலப்பகுதி. நகர்வு நடவடிக்கைகள் சாத்தியமற்றுப் போனதால் ஷெல் தாக்குதல்களும் விமானத் தாக்குதல்களும் நாளாந்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தன. தமிழர் பிரதேசத்தில் குறைந்தது ஒருவராவது இறக்கும் நிலை தான் இருந்தது. இவற்றிற்கு மத்தியிலும் மக்களின் வாழ்வு என்னவோ நகரத்தான் செய்தது.

கடுமையான பொருளாதாரத் தடைகளினூடும் நாங்கள் வாழப் பழகியிருந்தோம். இந்தத் தடைகள் புதிது புதிதான தப்பி வாழும் வழிவகைகளையும் (Survival) எங்களுக்குக் கற்பித் திருந்தன. ‘ஜாம்’ போத்தலில், மண்ணெண்ணெய் தோய்த்த பஞ்சில் எரியும் விளக்கில், பதுங்குகுழியில் இருந்தும் தமது கல்வியை தொடர்ந்தது அந்தத் தலைமுறை. வேலை செய்தே பழக்கப்பட்டவர்கள் எம் மக்கள். உணவுப் பொதிகள் அனுப் புவார்கள், நிவாரணம் கிடைக்கும் என்று பட்டினியோடு காத்திருக்காமல் சுய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் முயற்சியில் ஒவ்வொரு வீடும் இறங்கியது. வீட்டுத் தோட்டங் கள் உணவுப் பற்றாக்குறையை ஓரளவுக்கு நிவர்த்தி செய்தன.

நாட்டு மக்களைப் பற்றியும் அவர்களின் பாதுகாப்பு, நல்வாழ்வு பற்றியும் மட்டுமே சிந்திக்கும் இளைய தலைமு றைனரும் அவர்களை வளர்த்தெடுத்த அந்த ‘மேன்மையான மனிதரும்’ வாளாவிருப்பார்களா? இரவும் பகலும் ஆராய்ந்து, அது தொடர்பான அறிஞர்களின் அறிவுரைகளையும் ஆலோச னைகளையும் பெற்று, எங்கள் பொருளாதார வளர்ச்சியை ■



# நினைவழியா நினைவுகள்

மேம்படுத்தக் கூடியதும், எந்தத் தடைகளிலும் பொருளாதாரத் தன்னிறைவு காணக்கூடியதுமான திட்டங்களை அவர்கள் ஏற்கனவே தீட்டியிருந்தனர்.

'பெரியவரின்' பணிப்பின் பேரில், மக்களுடன் இணைந்து, பொருண்மிய வேலைத்திட்டங்களில் இடையறாது வேலை செய்து கொண்டிருந்தனர் ஒரு பகுதியினர். ஒரு அரசுக்கான எல்லாக் கட்டமைப்புகளும் கட்டப்பட்டு, குறைகள் திருத்தப்பட்டு, திறம்பட இயங்கிக் கொண்டிருந்தன. சேர, சோழ, பாண்டியர்களின் பெயரில் வணிக வளாகங்கள் இயங்கின. நமது இடத்தில்தான் பதுக்கல் என்ற பேச்சுக்கே இடமில்லையே. உணவுப் பொருட்களை எல்லா மக்களுக்கும் சரியாகப் பகிர்ந்தளிக்கும் வேலையை இந்த நிறுவனங்கள் திறம்படச் செய்தன.

1993 காலப்பகுதி அது. ஒரு சிக்கல் எழுந்தது. அப்போது ஒரு கிலோ அரிசியின் விலை ரூபா 19.50. அரிசி வாங்க வருபவர்களுக்கு மிகுதிப் பணம் கொடுக்கவும் அரிசி கொள்முதல் செய்யும்போது பணம் கொடுக்கவும் 50 சதக் குற்றிகள் அதிகளவில் தேவைப்பட்டன. அப்போது 50 சதக் குற்றிகள் தட்டுப்பாடாக இருந்த நேரம் அது. இதனால் விடயத்தை 'பைப்' என்ற பாவரசனிடம் எடுத்துச் சென்றனர் வாணிபத்தினர். நெல் வாணிபப் பணிப்பாளராக அப்போது பாவரசன் வேலை செய்து கொண்டிருந்தார். நீண்ட யோசனையின் பின், அரிசி விலையை 50 காசுகள் உயர்த்துவதுதான் பிரச்சனையைத் தீர்த்து வைக்கும் என்று நினைத்தனர் அவர்கள். தமது யோசனையை 'பெரியவரிடம்' எடுத்துச் சென்றார் பாவரசன்.

'பெரியவர்' விலை அதிகரிப்பிற்கு ஒத்துக் கொள்ளவில்லை. எந்தச் சூழ்நிலை வந்தாலும், எந்தப் பொருளாதார நெருக்கடியிலும் அதை மக்கள் மீது சுமத்துவது தவறு என்று எடுத்துரைத்தார்.

அரிசி விலையை 50 காசுகள் குறைத்து 19 ரூபாவாக்குங்கள், ஒரு ரூபா தாராளமாக புழக்கத்தில் இருக்கிறது. மக்களும் பாதிக்கப்பட மாட்டார்கள் என்றார். பிரச்சனை முடிவுக்கு வந்தது.

தன்னலமற்ற அரசியல் செய்பவர்தான் உண்மையான தலைவர். மேன்மக்கள் என்றும் மேன்மக்களே.

சிறிலங்காவில் இப்போதுள்ள நிலைமையை எண்ணிப் பாருங்கள். வாழ வழியற்று மக்கள் வீதியில் இறங்கிப் போராடுகிறார்கள். நாட்டைச் சுரண்டி வீட்டை வளர்த்த கூட்டம் இன்னமும் கதிரைக்காக அடிபடுகிறது.

**உண்மையான தலைவர்கள் உருவாக்கப் படுவதில்லை. அவர்கள் உருவாகிறார்கள்.**

> **சிறிலங்காவில் இப்போதுள்ள நிலைமையை எண்ணிப் பாருங்கள். வாழ வழியற்று மக்கள் வீதியில் இறங்கிப் போராடுகிறார்கள். நாட்டைச் சுரண்டி வீட்டை வளர்த்த கூட்டம் இன்னமும் கதிரைக்காக அடிபடுகிறது. உண்மையான தலைவர்கள் உருவாக்கப் படுவதில்லை. அவர்கள் உருவாகிறார்கள்.**





# வார்த்தைகளும் அர்த்தங்களும்



ந.மாலதி

வார்த்தைகளும் அர்த்தங்களும் என்பதற்கான விளக்கங்களை பல கோணங்களில் எடுத்துச் செல்லாம். அதிகமாக இது ஒரு மொழியியல் சார்ந்தே பார்க்கப்படும். அந்த கோணத்தில் பார்ப்பது இங்கு நோக்கம் அல்ல. வார்த்தைகள் வரலாற்றில் எவ்வாறு மாற்றமடைந்திருக்கிறது என்று பார்ப்பது இன்னுமொரு பார்வை. இது வரலாற்று புரிதலுக்கு மிகவும் உதவி செய்யும். எந்த மொழியிலும் இந்தப்பார்வை வரலாற்று புரிதலுக்கு பயன் தரும். தமிழ் மொழியில் இது மிகவும் பயனுள்ள கோணம். ஏனென்றால் தமிழ் வரலாறு பல ஆயிரமாண்டு பழமையானது என்று சொல்லப்பட்டாலும் அந்த வரலாறு மிக அண்மை காலத்தில் தான் வெளிச்சத்திற்கு வருகிறது. வரலாற்று ரீதியாக எவ்வாறு சில தமிழ் சொற்கள் அர்த்தப்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதை முதலில் பார்க்கலாம். வார்த்தைகள் சமூகரீதியாக எப்படி அர்த்தப்படுத்தப்படுகின்றன என்பதை விளக்குவது சமூகவியல் பார்வை. அவற்றிற்கான சில உதாரணங்களையும் பார்க்கலாம். இறுதியில் அரசியலில் வார்த்தை பிரயோகங்களும் அவை என்ன அர்த்தத்தில் கையாளப்படுகின்றன என்பதையும் பார்க்கலாம்.

## வரலாற்றில்

எனக்கு கொஞ்சமாவது தெரிந்த பழைய தமிழ் இலக்கியம் திருக்குறள் தான். அதை வைத்தே சில வார்த்தைகளை பார்ப்போம்.

திருக்குறளில் வரும் ஒரு சொல் – அந்தணர்,

அந்தணர் என்ற சொல் யாரைக் குறிக்கிறது? அண்மைக்காலம் வரை நானும் பலரைப்போல இது பிராமணர்களை குறிக்கிறது என்றுதான் நம்பி வந்தோம். நீத்தார் பெருமை என்ற அதிகாரத்தில்,

**அந்தணர் என்போர் அறவோர்**
**மற் றெவ்வுயிர்க்கும்**
**செந்தண்மை பூண்டொழுக லான். (குறள் 30)**

என்று தெளிவாக சொல்கிறது குறள். அதே போல செங்கோன்மை என்ற அதிகாரத்தில்,

**அந்தணர் நூற்கும் அறத்திற்கும்**
**ஆதியாய்**
**நின்றது மன்னவன் கோல். (குறள் 543)**

இவையிரண்டுமே அந்தணர் யார் என்பதை தெளிவாக சொல்கிறது. பிராமணர் இச்சொல்லை தங்களைக் குறிப்பதற்காக மாற்றியது பிற்காலத்தில் வந்த வரலாற்று மாற்றமே.

திருக்குறளில் வரும் இன்னுமொரு சொல் – இறைவன். கடவுள் வாழ்த்து அதிகாரத்தில் பல தரம் வருவது இச்சொல். படைச்செருக்கு என்ற அதிகாரத்தில்,

**உறின்உயிர் அஞ்சா மறவர் இறைவன்**
**செறினும் சீர்குன்றல் இலர்.**
**(குறள்7 78)**

போர்வந்தால் உயிரின் பொருட்டு அஞ்சாமல் போர் செய்யத் துணியும் வீரர், தலைவன் சினந்தாலும் தம்முடைய சிறப்புக் குன்றாதவர் என்பது தான் இக்குறளின் பொருள். இங்கு இறைவன் என்பது தலைவன் என்றுதான் பொருள் படுகிறது. ஆனால் வரலாற்று மாற்றத்தால் நாம் இறைவன் என்றால் கடவுள் என்றுதான் அர்த்தம் கொள்கிறோம்.

இதே போல இன்று தெய்வம் என்றால் கடவுள் என்றுதான் பொருள் கொள்கிறோம். இச்சொல் திருக்குறளில் சில இடங்களில் வருகிறது. இவற்றில் கீழே நான்கு இடங்கள்,

**தெய்வம் மடிதற்றுத் தான்முந் துறும்,**
**தென்புலத்தார் தெய்வம்**
**விருந்தொக்கல் தான்**
**தெய்வம் தொழாஅள்**
**தெய்வத்தால் ஆகாததது எனினும்**

எனக்கு தெரிந்த மட்டில் இவற்றிற்கு எல்லாம் பொருந்துமளவிற்கு தெய்வம் என்ற சொல்லிற்கு பொருள் எமக்கு தெரியவில்லை என்றுதான் தோன்றுகிறது. ஆனால் அது நிச்சயமாக கடவுள் என்ற கருத்தில் இடம்பெறவில்லை.

## சமூக பார்வையில்...

மார்க்கோ போலாவைப் பற்றி பலரும் கேள்விப்பட்டிருக்கிறோம். காலனிய காலத்துக்கு முன்னர், அதாவது 12–13ம் நுற்றாண்டுகளில் தூர தேசங்களுக்கு பயணம் செய்து தான் அவதானித்தவற்றை பயணக்குறிப்புகளாக பதிவு செய்திருக்கிறார். தமிழ்நாடு மற்றும் யாழ் பகுதிகளிக்கும் வந்து சென்றிருக்கிறார். ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்யப்பட்ட அவருடைய குறிப்புகளிலிருந்து, இந்த நாட்டில் குழந்தைகள் கறுப்பு நிறத்தில் தான் பிறக்கிறார்கள். அதிக கறுப்பாக உள்ளவர்களே மேலாக பார்க்கப்படுகிறார்கள். இவர்கள் கடவுள் கறுப்பு நிறத்தவர் என்றும் பேய் வெள்ளை நிறத்தது என்றும் சொல்கிறார்கள். இவர்களுடைய கடவுள் சிலைகளும் ஓவியங்களும் கறுப்பு நிறத்திலேயே உள்ளன

இவ்வாறு கறுப்பு நிறத்தை போற்றிய தமிழர்கள் வரலாற்று காரணங்களால் வெள்ளை நிறத்தை போற்றும் சமூகமாக மாறினார்கள். இன்றோ வெள்ளை பெடியன் அல்லது வெள்ளை பெட்டை என்ற வார்த்தைகள் அழகான என்ற அர்த்தத்தில்தான் சொல்லப்படுகின்றன.

லத்தீன் அமெரிக்காவிலிருந்து ஒரு உதாரணம். லத்தீன் அமெரிக்கவை கைப்



பற்றிய ஐரோப்பியர்கள் ஸ்பானியர்கள். அஸ்ரெக் பேரரசு அப்போது மெக்சிகோ உட்பட மத்திய அமெரிக்க பகுதிகளில் ஆட்சி செய்துகொண்டிருந்தது. அவர்களின் தலைநகரமான ரெனிச்சிடலான் ஒரு ஆச்சரியமான அமைப்பை கொண்டது. இங்கு முதலில் வந்த ஸ்பானிய குழுவின் தலைவன் கொற்றேஸ். அவனை அஸ்ரெக் அரசனும் மக்களும் ரெனிசிட்லானுக்குள் வரவேற்றார்கள். ஸ்பானியர்களுடைய சூழ்ச்சியை அப்பேரரசன் சந்தேகிக்கவில்லை. உள்ளே நுழைந்த ஸ்பானியர்கள் அங்கிருந்த மக்களின் தலைகளை வெட்டி நகரையும் பேரரசனையும் கைப்பற்றினார்கள். அதே ஸ்பானியர்கள் அஸ்ரெக் பேரரசின் மக்கள் தங்களை வெள்ளை கடவுள் என்று நம்பியதாக ஒரு கதையை அன்றிலிருந்து இன்றுவரை சொல்லி வருகிறார்கள். உண்மையில் அஸ்ரெக் மக்கள் இவர்களை தங்கள் மொழியில் ரியுல் என்ற சொல்லில் அழைத்தார்கள். இச்சொல் இவ்வுலகத்துக்கு அப்பாலுள்ள ஆவி மற்றும் அரக்கர் போன்றவற்றையே



குறிக்கும். ஆனால் இதையே ஸ்பானியர்கள் கடவுள் ஆக்கி விட்டார்கள். அதிகாரம் அர்த்தத்தை உருவாக்கும் என்பதற்கு இது இன்னொரு உதாரணம்.

## அரசியலில்

ஜோர்ஜ் ஓர்வல் (1903-1950) என்பவர் அரசியல் பின்னணியில் நாவல்கள் எழுதிய மிகவும் அறியப்பட்ட ஒரு ஆங்கில நாவலாசிரியர். அவருடைய நாவல்களில் மிகவும் பிரபலமான நாவலின் பெயர் 1984. அந்நாவலில் – ஒரு அரசியல் சூழல் – அங்கு ஒரு மக்கள் தொகையின் கட்டுப்படுத்தப்பட்ட வாழ்வு – அதற்காக அதன் அதிகார வர்க்கம் கையாளும் சில வார்த்தைகளும் அதற்கு அவர்கள் கட்டமைக்கும் அர்த்



தங்களும். அதாவது வார்த்தைகளின் அர்த்தங்களை கட்டுப்படுத்தி சமூகத்தை கட்டுப்படுத்துவது பற்றியது இந்நாவல்.

இதை படித்த பின், 500 ஆண்டுகளுக்கு முன் எவ்வாறு நாம் சாதிய கட்டமைப்புக்களை ஏற்றுக்கொண்டு அதுதான் நீதி என்று நம்பி வாழ்ந்தோம் என்பதை இன்னும் கொஞ்சம் ஆழமாக நான் புரிந்து கொண்டேன். கர்மம், விதி போன்ற வார்த்தைகளில் அதீத நம்பிக்கை, சாதிய பெயர்களுக்கு கொடுத்த அர்த்தங்கள் யாவும் நமக்கு கொடுக்கப்பட்ட வார்த்தைகளுக்கான அர்த்தங்கள் தானே. அந்த அர்த்தங்களுக்கு மேல் கட்டமைக்கப்பட்டது தானே அக்கால சாதியம் சார்ந்த பொருளாதாரம்.

சனநாயகம் என்ற வார்த்தையை இன்று வரையறுக்கும்படி உங்களை கேட்டால் என்ன சொல்வீர்கள்?. மக்களால் மக்களுக்காக மக்கள் ஆட்சி. இது அகராதி வரையறை. இன்று நடைமுறையில் இதற்கு வரையறை எப்படி இருக்கிறது. குறைந்தது மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒருவருக்கு ஒரு வாக்கு என்ற அடிப்படையில் தேர்தல் அரசியல். அவ்வளவும் இருந்தால் அது சனநாயக நாடு. இது சரியா பிழையா என்பது உங்களுக்கே தெரியும். ஆனால் ஏன் இப்படி? பதிலை தேடுவோம்.

ஐ.நா. மற்றும் மனித உரிமை என்ற சொற்களின் அர்த்தங்கள் என்ன? இவ்விரண்டு வார்த்தைகளும் எப்போ நம் அகராதியில் சேர்க்கப்பட்டது? 1948ம் ஆண்டு. அப்போது என்ன நடந்தது? இரண்டாம் உலக போர் முடிவுக்கு வந்தது. அதன் அழிவுகள் ஐரோப்பாவில் தான் அதிகம். அப்போரில் வெற்றி பெற்றவர்களும் ஜெர்மன் தவிர்த்த ஏனைய ஐரோப்பியர்கள் தான். இதே ஐரோப்பா தான் அப்போது ஏறக்குறைய முழு உலகத்தையும் காலனியாதிக்கத்திற்கு உட்படுத்தி இருந்தது. இதுவும் முடிவுக்கு வரும் காலம் ஆரம்பமாகியதும் இப்போதுதான. இந்த இரண்டாம் உலக போரின் வெற்றிக்கு முக்கிய பங்கு ஆற்றியது புதுசாக கிளம்பிய ஒரு சக்தி – ஐ-அமெரிக்கா.

இனியும் போர் அழிவுகள் வேண்டாம் என்ற சிந்தனையில் வெற்றி பெற்றோர் உருவாக்கியது தான் ஐநா. இந்த ஐநா தான் மனித உரிமைகள் என்ற வார்த்தையை பிரபலமாக்கியது. அதற்கான சாசனம், சில உடன்படிக்கைகள், சில மரபுகள் எல்லாம் உருவாக்கியது. இதில் அதிகம் ஊடக செய்திகளில் பேசப்படாத ஒரு அம்சம் தான் ஐநா பாதுகாப்பு சபை. இதில் ஐ-அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ், சீனா ரசியா ஆகிய நாடுகளுக்கு நிரந்தர அங்கத்துவம்.

மேலே குறிப்பிட்ட ஐநா சாசனம், உடன்படிக்கைகள், மரபுகள் எல்லாம் மென்மை சட்டங்கள். மனித உரிமைகள் உட்பட. ஐநா பாதுபாப்பு சபை தான் அதை தான் விரும்பியபடி எப்போது சர்வதேச சட்டங்களாக அமுல்படுத்துவது என்று தீர்மானிக்கிறது. அதிகாரம் எப்படி வார்த்



ஆக - அந்தணர்

தைகளுக்கு அர்த்தம் கொடுக்கிறது என்பதற்கு ஐநா ஒரு சிறந்த உதாரணம். இதே ஐநாதான் சனநாயகத்திற்கு வாக்கும்-தேர்தலும் என்ற அர்த்தத்தையும் பிரபலப்படுத்துகிறது.

ஆக – அந்தணர் என்றால் பிராமணர், இறைவன் என்றால் கடவுள், வெள்ளை என்றால் அழகு, ரியுல் என்றால் வெள்ளையர் கடவுள், சனநாயகம் என்றால் தேர்தல், ஐநா என்றால் நடுநிலை உலக அரசு என்று அதிகாரம் அர்த்தம் கொடுக்கிறது.

# ‘புத்த தேவா!’ எங்களை மன்னிப்பாயா?



20.05.2009

“அம்மே...! அம்மே.....!”

உற்சாக அழைப்புடன் அம்மாவைத் தேடி வந்த விதானகே, தாய் இருந்த நிலை கண்டு பதட்டமானான்.

“அழுகிறாவா.? ஏன்.? அதுவும் இன்றைய தினசரிப் பத்திரிகையைக் கையில் பிடித்தபடி....”

ஓடிப்போய் அம்மாவுக்கு முன்பாக முழந்தாளிட்டு உட்கார்ந்தபடி,

“என்னம்மா? ஏன் அழுகிறீர்கள்.? ஏதாவது கவலை தரும் செய்தியா?”

அன்னை பதிலேதும் சொல்லாமல், தினசரியில் தான் பார்த்துக் கொண்டிருந்த பக்கத்தை அவனிடம் நீட்டினார்.

அங்கே.....

பிஸ்கட்டைச் சுவைத்தபடி, மண்மூடைக் காப்பரண் மீது உட்கார்ந்திருக்கும் ஒரு சிறுவனுடைய படம்! சாந்தம் தவழும் கண்களுடன், கள்ளம் கபடமற்ற அழகிய முகம்.

“இதுவா....? இந்தப் படத்தைப் பார்த்தா அழுதீங்கள்....? என்று கேட்பது போன்ற பாவனையில், படத்திலிருந்து கண்களை விலக்கி அம்மாவைப் பார்த்தான்.

அம்மாவின் தலையசைப்பில் “ஆம்!” என்ற பதில் தெரிய,

“யாரம்மா இந்தப் பையன்....? அவன் படத்தைப் பார்த்து ஏன் அழுகிறீர்கள்...? சொல்லுங்கள் அம்மா. இது யார்?

“அந்த மனிதரின் பிள்ளை.!”

‘அந்த மனிதர்’ என்றால் யாரவர்? அவருடைய பிள்ளையின் படத்தைப் பார்த்து நீங்கள் ஏன் அழவேண்டும்?

விதானகேயின் கையிலிருந்து பத்திரிகையை இழுத்தெடுத்த அம்மா, மற்றுமொரு பக்கத்தை விரித்துக் காட்டுகிறா.

காற்சட்டை மட்டும் அணிந்திருக்க- மார்பில் அங்குமிங்கும் துப்பாக்கிச் சூடுகளின் அடையாளமாய் ஆறேழு துளைகள் தெரிய, மல்லாந்து கிடக்கும் அதே சிறுவனுடைய படம்!!

அதைப் பார்த்தவுடன் செய்திக் குறிப்பின் மீது அவசர அவசரமாகக் கண்களை ஓடவிட்டான் விதானகே. படித்து முடித்தபோது அவனது முகத்தில் ஒரு வெற்றிச் சிரிப்பு!

“நான் என்னவோ ஏதோ என்று நினைத்தேன். போயும் போயும் ஒரு தமிழ்ச் சிறுவனுக்காக,. அதுவும் அந்தக் கிரிமினலின் ( criminal ) பையனுக்காக நீங்கள் இப்படிக் கவலைப்படுவது விசித்திரமாயிருக்கிறது!”

“ விதானகே!!... நிறுத்து!... வாயை மூடு!!.. யாரடா கிரிமினல்...?”

இந்தளவுக்கு அம்மாவின் குரல் உச்சம் தொட்டது இதுவே முதல் தடவை. அந்தக் குரலில் அன்பையும் கனிவையும் மட்டுமே கண்டவன், இப்படியொரு கோபத்தையும் உக்கிரத்தையும் இதுவரை காலமும் பார்த்ததே இல்லை.


விதானகே வெலவெலத்துப் போனான். இருபத்து மூன்று வருட வாழ்க்கையில் அம்மா இப்படிக் கோபப்பட்டது இன்று முற்றிலும் புதிது.

அப்படியே கீழே உட்கார்ந்து விட்டான். உடலும் கைகளும் லேசாய் நடுங்கிக் கொண்டிருந்தன.

சில நிமிடங்கள் வெறித்த பார்வையுடன் எங்கோ பார்த்துக் கொண்டிருந்த அம்மா, மகனுக்கு முன்னால் உட்கார்ந்து அவன் முகத்தை உற்றுப் பார்த்தா.

“உனது பெயர் என்ன?”

அஜந்தி



# ‘புத்த தேவா!’ எங்களை மன்னிப்பாயா?

‘‘என்ன இது....? என்னிடம் பெயர் கேட்கிறா. அம்மாவுக்கு மனநிலை ஏதும் சரியில்லாமல் போய்விட்டதா.... ?’’ ‘‘விதானகே..’’

‘‘அது மட்டும் தானா?’’

‘‘ இல்லை.... கரன் விதானகே’’

‘‘எங்கள் இனத்தில் யாருமே வைக்காத- சம்பந்தமில்லாத- இந்த கரன் என்ற பெயரை எனது பெயருடன் சேர்த்து ஏன் வைத்தீங்கள் என்று அடிக்கடி என்னிடம் கேட்பாயே நினைவிருக்கிறதா..??’’

‘‘அதை என்றுமே நீங்கள் சொன்னதில்லையே அம்மா.. நேரம் வரும்போது சொல்லுவேன் என்றுதானே சொல்லுவீங்கள்?’’

‘‘ஆமாம்... இப்போது அந்த நேரம் வந்துவிட்டது.... அதைப் புரிந்து கொள்ளக் கூடிய வயசும் உனக்கு வந்துவிட்டது.... சொல்கிறேன் அதற்கு முன், சற்று முன், ‘கிரிமினல்’ என்று நீ குறிப்பிட்டாயே ஒருவர்,

‘‘....நீ எங்கள் பிள்ளையாகக் கிடைப்பதற்குக் காரணமாய் இருந்தவரே அந்தக் ‘கிரிமினல்’தான் என்பதை முதலில் உனக்குச் சொல்லி விடுகிறேன்....’’

‘‘என்ன இது....? இப்படியொரு புதிரைத் தூக்கிப் போடுறா? நான் பிறப்பதற்கு ‘‘அந்தக் கிரிமினல்- அதாவது, அம்மாவின் பாசையில் ‘அந்த மனிதர்’ - தான் காரணம் என்றால், அது எப்படி என்ன குழப்பம் இது?’’

தொடர்ந்து அன்னை சொல்லப் போவதைக் கேட்பதற்கு மகன் ஆர்வமாகினான்.

‘‘போர் நடவடிக்கை ஒன்றுக்காக யாழ்ப்பாணம் போக வேண்டி ஏற்பட்டதால், ராணுவ சேவையிலிருந்த உனது அப்பா, எங்களுக்குத் திருமணமாகி இரண்டு மாதங்களிலேயே என்னைப் பிரிந்து செல்ல நேரிட்டது. உக்கிரமாக நடந்த அந்தச் சண்டையின் போது, அவர் போராளிகளால் சிறைப்பிடிக்கப் பட்டார்....

சில காலம் கடந்தது.

.....நீண்ட கால சிறைவாசம் ஏற்படுத்திய விரக்தியினால், என்னை ஒரு தடவை சந்திக்கும் வாய்ப்பைத் தனக்குத் தரும்படி உனது அப்பா, சிறைக் காவல் போராளிகள் ஊடாக தலைவர் பிரபாகரனுக்கு ஒரு கடிதம் அனுப்பினாராம்.

( இதை உனது அப்பா பின்னர் என்னிடம் சொன்னார்..)

....ஒரு நாள் எனக்கு ஒரு கடிதம் வந்தது.

நான் விரும்பினால் யாழ்ப்பாணத்துக்கு வந்து, சிறையிலிருக்கும் எனது கணவரைப் பார்த்துத் திரும்பலாம் என்று அந்தக் கடிதம் அனுமதி வழங்கியிருந்தது.... நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. மறுநாளே, அனுராதபுரத்திலிருந்து புறப்பட்டு ரயில் மூலம் யாழ்ப்பாணம் போனேன்..... உனது அப்பா இருந்த இடத்திற்கு போராளிகள் என்னைக் கூட்டிப் போனார்கள்....

....திருமணமான கையோடு ஏற்பட்ட பிரிவு..... ஒருவரை ஒருவர் காணவேண்டும் என்று அதுவரை நாளும் எம் இதயங்களில் தேங்கிக் கிடந்த ஆவல்.....

....பேச வேண்டிய எத்தனை எத்தனையோ விடயங்களை அன்று இருவரும் பேசித் தீர்த்தோம்......

.....மாலைப் பொழுதாகி விட்டது...... மீண்டும் அனுராதபுரம் செல்லும் ரயிலைப் பிடிக்க வேண்டும்... பிரிய மனமின்றிப் புறப்பட்டேன்...... போராளிகள் ரயில் நிலையம் வரை என்னைப் பாதுகாப்பாகக் கூட்டிப் போனார்கள். ஆனால், என்ன காரணத்தினாலோ அன்றைய மாலைக்கான ரயில் சேவை ரத்தாகியிருந்தது.....?

‘‘ஓ!....அப்போ அந்த ரயில் நிலையத்திலேயே அன்றிரவு தங்கி இருந்தீங்களா....?

‘‘ இல்லை மகனே! அவர்கள் என்னை அப்படி விடவில்லை. திரும்பவும் என்னைத் தங்களுடன் அழைத்துச் சென்றார்கள்

‘‘ம்... பிறகு?’’

‘‘இரவு என்னை எங்கே தங்க வைப்பது என்று அவர்கள் யோசித்தார்கள்.. அந்த இடத்துக்கு சமீபமாகப் பெண் போராளிகளின் முகாம் எதுவும் இருக்கவில்லை எனவே, இது பற்றித் தலைவரிடம் அறிவித்து, மேற்கொண்டு என்ன செய்வது என்று அவர்கள் கேட்க,

‘‘அந்தப் பெண்மணி எந்த இடம் தனக்குப் பாதுகாப்பு என்று நினைக்கின்றாவோ, அந்த இடத்தில் தங்க வைக்கவும். என்று அவர் பணித்து விட்டார்.



# 'புத்த தேவா!'
## எங்களை மன்னிப்பாயா?

....எனது கணவருடன் சிறையிலேயே நான் தங்குவதாக என் விருப்பத்தைக் கூறியபோது, அவர்கள் அதை ஏற்றுக் கொண்டு என்னை அங்கேயே தங்க அனுமதித்தார்கள்.

''பயங்கரவாதிகள் என்று சொல்லப் படுகின்றவர்களிடம் இப்படிப்பட்ட நல்ல குணங்கள் இருக்குமா? என்னால் நம்ப முடியவில்லை அம்மா!!''

''மிகுதியையும் சொல்கிறேன் கேள் மறுநாள் காலை விடிந்த போது, எல்லோருக்கும் நன்றி சொல்லிப் புறப்பட்ட என்னைப் போராளிகளே மீண்டும் ரயில் நிலையத்தில் கொண்டு போய் விட்டார்கள்..''

....அடுத்து வந்த இரண்டு மாதங்களில், எனது வயிற்றில் நீ வளர்ந்து கொண்டிருந்தாய் என்பதை உணர்ந்து கொண் டேன். எந்த ஒரு பெண்ணுடைய வாழ்க்கையிலும் உச்சக்கட்ட மான ஒரு சந்தோசம் அது..... ஆனால்..... அந்த சந்தோசத்தை வெளியே சொல்ல முடியாத சூழ்நிலை...'' ஒரு நீண்ட பெருமூச்சு அம்மாவிடமிருந்து வெளிப்பட்டது.

''ஏன் சொல்ல முடியவில்லை?''

''கணவர் சிறையில் இருக்கும் போது நான் இங்கே எப்படி கர்ப்பமாகினேன் என்ற கேள்வி வரும்! பலரும் எனது ஒழுக்கத் தைப் பற்றி பிழையாகக் கதைப்பார்கள்.''

''ஓ.... அது பற்றி அதன் நினைத்துப் பார்க்காமல் கேட்டு விட்டேன்.... உண்மைதான் உங்களுடைய நிலைமை எப்படி இருந்திருக்கும் என்று உணர முடிகிறது.

....எனது மாமியார் - அதுதான் உனது பாட்டி - என்னை நம்பினார். ஆனால் மற்றவர்களிடம் இதை எப்படி விளக்கிச் சொல்ல முடியும்? எனக்குள் ஒரே குழப்பம்.... எனது இந்த நிலை யைப் பற்றி விரிவாக விளக்கி ஒரு கடிதம் எழுதி பிரபாகரனின் பார்வைக்காக அனுப்பி வைத்தேன்......

....பதில் கடிதம் வந்தது....

'' என்ன பதில் போட்டார்கள்....? ஆவலை அடக்க முடியாமல் விதானகே கேட்டான்.

''என்னுடைய மாமியாரையும் எங்களுடைய மதகுரு ஒருவ ரையும் கூட்டிக்கொண்டு அங்கே வந்து போகும்படி எழுதியிருந் தது. அதன்படி மூவரும் அங்கு போனோம். உனது அப்பாவின் மூலமாகவே எல்லா உண்மைகளும் விபரங்களும் மதகுருவிற்கும் உனது பாட்டிக்கும் தெரியப் படுத்தப்பட்டது....

''ஆனால்... இதுவும் எனக்குத் திருப்தி தரவில்லை......

''ஏன் அம்மா.....?''

''ஊர் மக்கள் நம்புவார்களா....? நாம் கூறுவது பொய் என்று நினைத்து, தொடர்ந்தும் என்னை ஒரு குற்றவாளியாகப் பார்க் கும் நிலை ஏற்பட்டால்....? இதை நினைக்க என்னால் தாங்க முடியவில்லை. கண்ணீர் விட்டு அழுதபடி அந்தப் போராளிக ளிடம் எனது நிலைமையை விளக்கிச் சொன்னேன்......

.....நான் இப்படித் துன்பப்பட்டுக் கண்ணீர் விட்டு அழுத செய்தி உடனடியாகத் தலைவருக்கு அறிவிக்கப்பட்டது.....

சிறிது நேரத்தில். இப்போது இடைநிறுத்திய அம்மா கண்கள் மூடிக் கைகள் கூப்பிக் கும்பிட்டா.

'அம்மா என்ன சொல்லப் போகிறா? என்னதான் நடந்தி ருக்கும்?' என்பதை அறிய விதானகேயின் உள்ளம் பரபரத்தது.

''....சிறிது நேரத்தில் அங்கே வந்த போராளிகள், எனது கணவரை விடுதலை செய்வதாகவும், அவரை எம்முடன் கூட் டிப் போகலாம் என்றும், தங்கள் தலைவருடைய பணிப்பின் பேரிலேயே இது நடைமுறைப்படுத்தப் படுவதையும் தெரிவித்த போது, நான் அடைந் மகிழ்ச்சிக்கு இந்த உலகமே ஈடாகாது.....'

அம்மாவின் கண்கள் கலங்கியிருந்தன. தொடர்ந்தா....

''அன்று மட்டும் எனது கணவர் விடுதலை செய்யப்பட்டி ருக்கா விட்டால், ஊருக்குத் திரும்பியவுடன் தற்கொலை செய்து உயிரை மாய்த்துக் கொள்ளும் முடிவோடுதான் இருந்தேன். நீயும் பிறந்திருக்க மாட்டாய்.''

சில நிமிடங்கள் இருவரும் எதுவும் பேசிக்கொள்ளவில்லை. அசாதாரணமாக நிலவிய அந்த மௌனத்தை அம்மாவே கலைத் தா.

''.....அந்த மனிதர் என்னை ஒரு சிங்களப் பெண்ணாகப் பார்க் கவில்லை. ஒரு சகோதரியாக மட்டுமே பார்த்தார்..... எந்தப் பெண்ணுக்கும் வரக்கூடாத ஒரு களங்கம் எனக்கு ஏற்பட்டுவி டக் கூடாது என்ற கரிசனையின் பேரில் தான் அந்த முடிவை எடுத்துச் செயற்படுத்தினார்......

..... நீ நினைப்பது போல அந்த மனிதர் ஒரு கிரிமினலும் அல்ல..... பலரும் சொல்வதுபோல அவர்கள் பயங்கரவாதிகளும் அல்லர்.

.....அவர்கள் போராளிகள். தங்களுடைய விடுதலைக்காகப் போராடுபவர்கள்......?

அவனிடமிருந்து எந்தப் பதிலும் இல்லை. கீழே கிடந்த தின சரியை எடுத்து, மீண்டும் அந்தப் பக்கத்தின் மீது பார்வையை ஓடவிட்டான்.

வெற்று மார்பில் துப்பாக்கிச் சன்னங்கள் பாய்ந்த துளைக ளுடன் மல்லாந்து கிடக்கும் அந்த ஏதுமறியாச் சிறுவனுடைய படம் மீது இரண்டு சொட்டுக் கண்ணீர் விழுந்து தெறிக்கிறது.

**''புத்த தேவா!!'' எங்களை மன்னிப்பாயா...??**





# சிறிலங்காவின் அரசியலமைப்புகள்

## ஒரு பார்வை

### அரசியலமைப்பு என்றால் என்ன?

ஒரு நாட்டின் முதன்மையான, அதியுச்ச சட்டமே அந்த நாட்டின் அரசியலமைப்பாகும். ஒரு அரசு எப்படி ஆளவேண்டும், அதன் குடிமக்கள் எவ்வாறு ஆளப்பட வேண்டும் என்பதை விளக்கும் அடிப்படைக் கோட்பாடுகள் அனைத்தையும் அரசியலமைப்புக் கொண்டிருக்கும்.

இலங்கையின் வரலாற்றில் காலனித்துவ காலத்தில் இரண்டு அரசியலமைப்புகள் இருந்தன. பின்னாளில் இப்போது இருப்பதையும் சேர்த்து இரண்டு குடியுரிமை அரசியலமைப்புகளும், ஏகப்பட்ட சட்டத் திருத்தங்களும் உள்ளன.

### டொனமூர் அரசியலமைப்பு

1931 – 1947 காலப்பகுதியில், பிரிட்டிஷார் ஆட்சியில் இலங்கை இருந்தபோது இருந்த அரசியலமைப்பு இது. இந்தக் காலத்தில்தான் வயது வந்தவர்களுக்குரிய சர்வசன வாக்கெடுப்புடன் கூடிய பொதுத்தேர்தல் நடைமுறைக்கு வந்தது. ஒருவருக்கு ஒரு வாக்கு என்ற அடிப்படையில் உள்நாட்டு அதிகாரங்களை தீர்மானிக்கும், கையாளும் அதிகாரம் மக்களுக்குக் கிடைத்தது.

ஆசியப் பிராந்தியத்திலேயே முதல் நாடாக இலங்கையில் பெண் களுக்கு வாக்களிக்கும் உரிமை கிடைத்தது.

சில திருத்தங்கள் மூலம் பிரிட்டிஷாரிடமிருந்து சில அதிகாரங்க ளைப் பெற்றது இலங்கை. பின்னாளில் பாராளுமன்ற அமைப்புமுறை உருவாக இது காரணமானது.

இந்த அரசியலமைப்பின் முக்கிய குறைபாடாக, இலங்கை மக்கள் மட்டுமே வாக்களிக்கும் உரிமை இருந்ததால் இந்திய வம்சாவழித் தமிழர்கள் வாக்களிக்கும் உரிமை மறுக்கப்பட்டனர். இதனால் ஏற் பட்ட முரண்பாட்டைக் களையும் நோக்கில் இனரீதியாக இருந்த




பிரதிநிதித்துவம் பிராந்திய ரீதியிலான பிரதிநிதித்துவமாகப் பதிலீடு செய்யப்பட்டது. இதனால், 1931 இல் புதிய அரசியலமைப்பின் பின் வந்த முதலாவது பொதுத் தேர்தலை தமிழ் அரசியற் பிரதிநிதிகள் புறக்கணித்தனர்.

### சோல்பெரி அரசியலமைப்பு -

1948 இல் இலங்கை 'டொமினியன்' அந்தஸ்து பெற்ற ஒரு தன்னாட்சி நாடாக மாறுவதற்கு காரணியாகவிருந்தது இந்த அரசி யலமைப்பு. இதன் வரைபின் பின் டொனமூர் அமைப்பு கைவிடப் பட்டது. இந்த அரசியலமைப்பு உருவாக்கத்தில்




திரு டி எஸ் சேனநாயக்கா முக்கிய பங்கு வகித்தார். பிரதமருடன் கூடிய அமைச்சரவை உருவாகவும், உள்நாட்டு விவகாரங்களை அவர்கள் கையாளும் அதிகாரம் வழங்கப்படவும் காணமாகவிருந்தது. (1972 இல் இலங்கை சுதந்திர குடியரசு நாடாகும் வரை) பாது காப்பு, வெளிவிவகாரங்கள் தொடர்பான அமைச்சுகளுக்கு பிரிட்டி ஷாரே பொறுப்பாகவிருந்தனர்.

முன்பிருந்த அரசியலமைப்புடன் ஒப்பிடுகையில், சிறுபான்மை இனத்தவருக்கு கூடுதல் ஆசனங்கள் கிடைக்கும் வகையில் சிறு திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன.

## முதலாவது குடியரசு அரசியலமைப்பு

'சிலோன்' என்ற பெயரிலிருந்து 'சிறிலங்கா'வாகியது இலங்கை. 1970 இல் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஐக்கிய முன் னணியின் சார்பில் சிறிமாவோ அம்மையார் ஆட்சியேறியதும் சோல்பெரி அமைப்பு கைவிடப்பட்டு இந்த புதிய அரசியலமைப்பு அமுலுக்கு வந்தது. தேர்தலின்போது, இந்த உத்தரவாதம் கொடுத் துத்தான் ஐக்கிய முன்னணி பெரும்பான்மை வாக்குகள் பெற்றது.

1972 மேயில் பாராளுமன்றில் இதற்கான விவாதம் நடைபெற்ற போது, தமிழ்க் கட்சிகளும் ஐக்கியதேசியக் கட்சியும் எதிர்த்து வெளி நடப்பு செய்தன. 119 வாக்குகளால் வெற்றி பெற்றது.

முக்கிய திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. சிங்களம் மட்டும் உத்தியோகபூர்வ மொழி, பௌத்த மதம் முன்னுரிமையுள்ள மதம், ஒற்றையாட்சி – அதில் முழு அதிகாரங்களும் மத்தியில் கையாளப் படும் மத்திய அரசு இணங்கினால் மட்டும் நிர்வாகப் பிரிவுகளுக்கு அதிகாரங்களைப் பிரித்துக் கொடுக்கலாம் என்பன போன்ற திருத்தங் கள் சிறுபான்மையின மக்களின் வாழ்வைக் கேள்விக்குறியாக்கின.

பாராளுமன்ற பதவிக்காலம் ஆறு வருடங்களுக்கு நீடிக்கப்பட்டது.

## நிகழ்கால குடியரசு அரசியலமைப்பு

ஐக்கிய தேசியக் கட்சி ஆறில் ஐந்து பெரும்பான்மை பெற்று ஜே ஆர் ஜெயவர்தன பதவியேற்றதுடன் சிறிமாவின் அரசியலமைப்பு முடிவுக்கு வந்தது.

சகல அதிகாரங்களும் பொருந்திய, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை அறிமுகப்படுத்தப்பட்டது. சர்வ அதிகா ரங்களும் கொண்ட பதவியில் முதல் ஜனாதிபதியாக ஜே ஆர் ஜெய வர்த்தனவும், பிரதமராக பிரேமதாசவும் பதவியேற்றனர்.

பாராளுமன்ற அவையில் விகிதாசார முறை நடைமுறைக்கு வந்தது. அப்போது அவையில் 196 பேர் உறுப்பினர்களாக இருந்தனர். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முன்பு பாராளுமன்றின் அதிகாரங்கள் முன்பிருந்ததை விடவும் குறைவாக்கப்பட்டது.

முக்கிய சட்டத்திருத்தம் நிறைவேற்றப்பட வேண்டுமானால், பாராளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெறவேண்டும். அத்துடன், சர்வசன வாக்கெடுப்பு மூலம் மக்கள் அதை ஏற்றுக் கொண்ட பின்னரே அந்த திருத்தச்சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்ற முறைமை ஏற்படுத்தப்பட்டது.

இந்த அரசியலமைப்பின் கீழ், பல முக்கியமான திருத்தச்சட்டங்கள் கொண்டு வரப்பட்டன.

## திருத்தச் சட்டங்கள்

**★1வது திருத்தச் சட்டம் - 1978 நவெம்பர்.**

**மேன்முறையீட்டு நீதிமன்றிற்குச் சென்ற சில வழக்குகளை உச்ச நீதிமன்றில் பாரப்படுத்த அனுமதி.**

**★2ம் திருத்தச்சட்டம் - 1979 பெப்ரவரி.**

**பாராளுமன்ற உறுப்பினர்கள் பதவி விலகவும், பதவி விலக்கவும் வெளியேற்றப் படுவதற்கும் ஏதுவான மாற்றங்கள்.**

**★3ம் திருத்தச்சட்டம் - 1982 ஆகஸ்ட்.**

**நான்காண்டு கால ஜனாதிபதி ஆட்சிக்காலம் முடிய, மீண்டும் ஒரு பதவிக்காலத்திற்காக மக்களிடம் அனுமதி பெறுவதற்கு ஏதுவான சட்டத் திருத்தம்.**

**★4ம் திருத்தச்சட்டம் - 1982 டிசெம்பர்.**

**பாராளுமன்றின் பதவிக்காலத்தை நீடிப்பதற்கான மக்கள் அனுமதி பெறுவதற்கான சட்டத்திருத்தம்.**

**★5ம் திருத்தச்சட்டம் - 1983 பெப்ரவரி**

**பிரதிநிதி இல்லாத பாராளுமன்ற பதவி வெற்றிடத்தை நிரப்ப இடைத்தேர்தல் நடத்தப்படலாம் என்ற திருத்தம்.**

**★6ம் திருத்தச்சட்டம் - 1983 ஆகஸ்ட்.**

**தனி அரசொன்று உருவாகுவதற்கென எவர் குரல் கொடுத் தாலும், அவருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்க அனுமதிக்கும் சட்டத் திருத்தம் இது. கறுப்பு யூலை கலவரத்தின் பின்வந்த இந்தத் திருத்தம் கடும் கண்டனங்களுக்கு ஆளானது.**

**★7ம் திருத்தச்சட்டம் - 1983 ஒக்டோபர்.**

**கிளிநொச்சி மாவட்டம் உருவாக்கப்பட்டது. இதன்மூலம், இலங் கையின் நிர்வாக மாவட்டங்கள் 25 ஆகின. மேல்நீதிமன்ற ஆணையர்கள் நியமனம் தொடர்பாகவும் இந்தச் சட்டத்திருத்தம் மாற்றம் வந்தது.**

**★8ம் திருத்தச் சட்டம் - 1984 மார்ச்.**

**ஜனாதிபதியின் சட்டத்தரணிகளை நியமிப்பதற்கு ஏதுவாக ஜனாதிபதிக்கு கூடுதல் அதிகாரம் வழங்கப்பட்டது.**

**★9ம் திருத்தச்சட்டம் - 1984 ஆகஸ்ட்.**

**பாராளுமன்ற உறுப்பினர்களை தெரிவுசெய்வதற்கு தகுதி இல் லாத அரச உத்தியோகத்தரின் சம்பளமட்டத்தை சீர்படுத்தும் திருத்தம்.**

**★10ம் திருத்தச்சட்டம் -**

**பாதுகாப்பு தொடர்பான தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை வேண்டும் என்பதை ரத்து செய்யும் திருத்தம்.**



# சிறிலங்காவின் அரசியலமைப்புகள்

★11ம் திருத்தச்சட்டம் - 1987 மே.

மேன்முறையீட்டு நீதிமன்றங்களின் நீதிபதிகள் எண்ணிக் கையைத் தீர்மானித்தல், மேல்நீதிமன்ற அதிகாரங்களைச் சீர்படுத்துதல், அமர்வுகளை ஒழுங்குபடுத்துதல் தொடர்பான திருத்தம்.

★12ம் திருத்தச்சட்டம் - 1987 செப்டெம்பர்

சட்டத்தில் இருந்த சில தவறுகள் காரணமாக இது நடை முறைக்கு வரவில்லை.

★13ம் திருத்தச்சட்டம் - 1987 நவெம்பர்.

மாகாணசபைகள் உருவாக்கப்பட்டு, சில அதிகாரங்களைப் பரவலாக்கல் செய்ய வழி செய்யும் சட்டத்திருத்தம். தமிழையும் உத்தியோக மொழியாக்கி, ஆங்கிலத்தை இணைப்பு மொழியாக்கவும் இதில் இடமிருந்தது. நீதிமன்ற அதிகாரம், பாதுகாப்புவிதிகள் என்பனவற்றிலும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

★14ம் திருத்தச்சட்டம் - 1988 மே.

பாராளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கை 125 ஆக்கப்பட்டது. தேசியப் பட்டியலில் இருந்து 29 பேர் பாராளுமன்றில் உறுப்பினராக ஒழுங்கு செய்யப்பட்டது. விகிதாசாரத் தேர்தல் முறை கொண்டுவரப்பட்டது. வெட்டுப்புள்ளி முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

★ 15ம் திருத்தச்சட்டம் - 1988 டிசெம்பர்.

தேர்தல் வலையங்களை இல்லாதொழிக்க நடவடிக்கை எடுக்கப் பட்டது.

★16ம் திருத்தச்சட்டம் - 1988 டிசெம்பர்.

சிங்களம், தமிழ் இரண்டையும் நிர்வாக மற்றும் சட்டவாக்க மொழிகளாக்க ஏற்பாடு.

★ 17ம் திருத்தச்சட்டம் - 2001 ஒக்டோபர்.

தேர்தல் ஆணையம், நீதிச்சேவைகள் ஆணையம் உருவாக்கம். அத்துடன் பொலிஸ் ஆணையமும் சுயாதீன ஆணைக்குழுக்கள் அமைவதற்கும் வழிவகை.

★ 18ம் திருத்தச்சட்டம் - 2010 ஒக்டோபர்.

மனித உரிமைகள் ஆணையம், தேர்தல் ஆணையம், உச்ச நீதிமன்றம் போன்றனவற்றிற்கு உறுப்பினர்களை நியமிப்பது தொடர்பானது.

★19ம் திருத்தச்சட்டம் - 2015 ஏப்ரல்.

ஜனாதிபதி ஆட்சிக்காலம் 5 ஆண்டுகளாக மட்டுப்படுத்தப் பட்டது.ஜனாதிபதிக்கிருந்த அதிகாரங்களும் ஓரளவுக்கு மட்டுப்படுத்தப் பட்டன. ஜனாதிபதி, அமைச்சரவையின் தலைவராகவும் முப்படைகளின் தலைவராகவும் தனது பதவிக் காலத்தில் தொடர அனுமதி தந்தது.

★18ம் சட்டத் திருத்தத்தை நீக்கி, மறுபடியும் 17ம் திருத்தத் தைத் அமுலாக்கவும் அனுமதி கொடுத்தது.

★ 20ம் திருத்தச்சட்டம் -

19ம் திருத்தச்சட்டத்தில் நீக்கப்பட்ட ஜனாதிபதியின் அதிகாரங்களை மீளவும் கொண்டுவர அனுமதிக்கும் சட்டம் இது. இதன்மூலம் ஜனாதிபதியும் பிரதமரும் முன்புபோல கூடுதல் அதிகாரங்கள் பெற இச்சட்டம் வழி செய்யும்.



# தவிப்பு!!

தனியாக வந்தோம்!
தனியாக போகப்
போகிறோம்!
போகும் முன்,
மற்றவர் மனங்களில்
நல் விதையாவோம்!
-அங்கு
கொண்டாட்டம் என்றால்
ஊரே கூடி நிற்கும்!
கும்மாளம் குதியாட்டம்
தான் - ஆனால்
இங்கே ?
பணம் இருந்தாலும்
திண்டாட்டம்தான்!

வீட்டு வளவுப்
பச்சைக் கீரை
சொட்டு தேங்காய்
போட்டு கடைஞ்சிருக்க
மண்சட்டி வாசனையோடு
என்ன சுவை?
இங்கே.. நாங்கள்..
நாடுகள் பலகடந்து
விமானம் மூலம் வர
நாறிப் போய்விடும் என்று
மருந்தடிச்ச மரக்கறிகளை
மனுஷர்
வாங்கிச் சாப்பிடுறம்
என்னதான் செய்யுறது?

நாலு பேரு சேர்ந்திருந்து
நான்கைந்து வார்த்தை
பேசும் வரம்,!!
நமக்கிங்கை
கிடைச்சிருக்கா?
நாலு சுவருக்குள்ளே
நாதியற்ற வாழ்கையிது!!

தோட்டதுக்குள்ளே
இறங்கினாலே
தேகத்திற்கு பயிற்சிதான்!
தொலைவாய் இங்கே
வந்ததாலே
தொலைபேசியில்
பொழுதுகள்
தொலைந்து போகிறதே!!

ஏக்கம் தான்!!
என்ன செய்ய?
தாக்கம்தான்
மனசுக்குள்ளே..,!
நோக்கம் ஒன்றாச்சும்
நிறைவேற
காத்திருப்போம்!

ஜனா





மிதயா கானவி

# கைதியின் இரவு!!

**மே 21, 200,9 கொடிய இரவு**

ஆளையாள் இனம் காணமுடியாத கும்மிருட்டு, பெரிய மலைகளிலிருந்து உருளும் பாறாங்கல்லாய் பயங்கரமான மனிதர்களின் கர்ச்சனைகள் மனதில் ஆழமாய் இறங்கியது, அந்த சத்தங்களின் சிங்கள மொழியின் பொருள் நன்கு தெரியா விட்டாலும் அந்த ஒலியில் இருந்து வரும் வெப்பக் கீற்றுக்கள் உயிர்வரை சென்று சுட்டது.

எங்கிருக்கின்றோம்?, ஏன் பிடித்து வரப்பட்டோம்? என்று தெரியா விட்டாலும், இனி என்ன நடக்கப் போகிறது என ஊகிக்க முடிந்தது. மரணபயம் அவர்களை அணுகவில்லை என்றாலும், ஒவ்வொரு அடிகளும் சாவை விடக் கொடூரமாக வலித்தன.

கண்களில் இருந்து கண்ணீர் வரவில்லை என்றாலும் இரத்தம் கொதித்துக் கொண்டிருந்தது கைகள் விலங்கிடப்பட்டு கிடந்தார்கள்.

''வவுனியா யோசப் முகாம்'' என்ற செய்தி அவர்கள் காதில் நுழையவே, முன்னர் அறிந்த அந்த வதைமுகாமின் கொடூர நினைவுகள் அவளிற்கு தலையைப்பிய்த்தது.

''ஆமியிடம் மட்டும் பிடிபட்டிராதேங்க தங்கச்சி. அவனைக் கண்டாலும் நிற்காமல் ஓடுங்கள்'' என பிரசன்னா அண்ணா (மாவீரன்) சுதந்திரபுரத்தில் வைத்து சொல்லிச் சென்றதும் நினைவில் வந்து பல்குழலாய் வெடித்தது.

இப்போது என்ன செய்வது என்று எண்ணுவதற்கு எதுவுமில்லை. அவள் கைகள் கூட ஆறுதல் தர மறுத்தன. அங்கு இருந்த நிமிடங்கள் எல்லாம் வருடங்களைப் போல் கொடூரமாய் கழிந்தன. இரும்புச் சப்பாத்துகளால், தலை முதல் கால் வரை, ஏறி ஆள் மாறி மாறி மிதித்தார்கள்.

பெரிய வெளிச்சத்தை முகங்களில் பாய்ச்சி, மரநாய் கோழி பிடிப்பதைப் போல் ஆட்களை இனம் கண்டு ஒவ்வொருவராய் இழுத்துக் கொண்டு போய்க் கொண்டிருந்தார்கள் இராணுவத்தினரும் இலங்கை புலனாய்வாளர்களும்.

பிடிக்கப்பட்ட எல்லோரும் போராளிகளாய் இருந்தவர்கள் என்று சொல்ல முடியாது. இறுதிவரை முள்ளிவாய்க்கால் வரை பயணித்த எத்தனையோ தமிழ்ப் பெண்களும் இருந்திருந்தார்கள். 'ஓ' வெனக் கதறி அழ இப்போது எந்த சக்தியும் இருக்கவில்லை. இனி அவர்கள் காப்பாற்றப்படுவார்கள் என்ற நம்பிக்கையும் துளியளவும் இருக்கவில்லை. ஆனாலும், எந்தக் கேள்வியுமற்று அடித்து, உதைத்து பாலியற் தொல்லைகளையும் கண்டமேனிக்குச் செய்யத் தொடங்கி விட்ட அந்த இரவில், இலங்கை இராணுவக் கொடூரர்களின் கட்டுப்பாடற்ற சித்திரவதைகளால் சிதைக்கப்பட்டு, அங்கு துடிதுடித்துக் கொண்டிருந்தவர்களில் அருளும் ஒருத்தி.

''இனிக் கேட்பதற்கு யாரும் அங்கிருக்கவில்லை. சிரிப்பும், கனைப்பும், கும்மாளமுமாய் சீருடை தரித்த மிருகங்கள் மனித வேட்டைகளை நடத்தி மகிழ்ந்த இரவொன்றின் கதை இது''.

அவள் பக்கத்தில் இருந்த பெண் ஒருத்தி அடி வாங்கி, வாங்கி திரும்பத் திரும்ப கதைத்தாள் கத்தினாள். இரக்கமற்ற இரும்புக் கரங்களோடு இருந்தவர்களுடன் முரண்டு பிடித்தாள்.

'எல்லாம் முடிந்து போனபின் ஏன் அடிக்கிறான்? தயவு செய்து விட்டு விடு!! எனது குழந்தை இப்போ தாய்ப்பாலுக்காக அழுது கொண்டிருக்கும்...

''நான் போராளி இல்லை..'' ''நான் ஓர் சாமானியப் பெண்''. என்றவளை

''நீ ஒரு பன்னி வேண்டும் என்றால் சொல்லு, உன் பால் குடிக்க பன்றிக் குட்டிகளை விடுறன்' என்றான் ஒரு இராணுவ மிருகம் அரைகுறைத் தமிழில், அந்த பெண் பதிலுக்கு திரும்ப ''கெஞ்சினாள்''. ''விட்டு விடு!!'' என் கணவரும் இறந்து விட்டார் விசாரித்து விட்டு உடனே விடுவதாக சொன்னதால் இரண்டு மாத குழந்தையை பக்கத்தில் கொடுத்து வந்தேன். ''என்னை ஏன் பிடித்தாய்?'' என்று



கதறினாள். எங்கள் எல்லா மனங்களையும் நாராய்க் கிழித்த அவளது கெஞ்சல்கள் அந்த அரக்க மனங்களை அசைக்கவேயில்லை, எந்த நீதி தேவதையும் வான்வழி இறங்கி வரவே இல்லை,

'இனி தமிழர்கள் எங்கள் அடிமைகள். நாங்கள் எது வேண்டுமென்றாலும் செய்யலாம். பெரிய மாத்தையா எல்லாம் சொல்லியாச்சு என்றான். நீ எதிர்த்துப் பேச முடியாது' என சப்பாத்து கால்களால் அவளது மார்பகங்களை மிதித்தான். வலிதாங்க முடியாது ஓ வென கதறியவளது வாயினுள் குப்பைகளைத் திணித்து மகிழ்ந்தான்.

''ஏய்!! கொட்டியாவை கூப்பிடு! காப்பாற்ற வாறாங்களா என்று பார்ப்போம்!'' அருளாலும் எழுந்து இருக்கவே முடியவில்லை. கைகள் வலியின் மிகுதியால் சோர்வடைந்திருந்தன. நா வரண்டு தாகம் எடுத்து தவித்தது.

அருளிற்கு இரண்டு குழந்தைகள். அவர்களைப்பற்றி மனம் அப்போது நினைக்கவில்லை.

''கடவுளே!. இவர்கள் என்னை உடனே சுட்டு விடவேண்டும்!!'' என்று மனம் இரங்கி எல்லாக் கடவுளிடமும் வேண்டினாள்.

எட்டி உதைத்தார்கள்.. ஏறி மிதித்தார்கள்.. கேட்க யாருமற்று கலங்கி கிடந்தார்கள் அவர்கள்.

தமிழில் உள்ள அத்தனை கேட்ட வார்த்தைகளையும் சொல்லி காறி முகத்தில் துப்பினார்கள். முழுவதும் நனைத்தபின் முக்காடு எதற்கு என்று மரணத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள். மன்றாடினார்கள் அவர்கள் 'மரணமே என்னை வந்து காப்பாற்றி விடு உடம்பில் ஒரு ஒட்டு துணி மட்டும் உயிர், மானம், பறிக்கப்பட்டு, உடல்மட்டும் கிழிபட்ட கந்தலாய்க் கிடந்தது.

காலை சூரிய உதயத்திற்கு முன் இந்த உயிர் பிரிய வேண்டி மண்டியிட்டுக் கிடந்தாள் அவள். இருள் முழுவதும் இரத்தத்தில் நனைந்து கொண்டது. ஆட்களை இனம் காண முடியாவிட்டாலும் பெண்கள்தான் என அறியமுடிந்தது.

உயிர் பிரியும் வலியை விட கொடுமையானது உரிமைகள் பறிக்கப்பட்டதன் வலி. ஆதனால், அருள் உணர்வுகள் சாகடிக்கப்பட்டு உணர்ச்சியற்ற நிலையில் சடமாகக் கிடந்தாள்.

இழப்பதற்கு எதுவும் இல்லாத போது எதைப்பற்றி சிந்திப்பது? மிருகக்காட்சி சாலையில் மிருகங்களைப் பார்வையிடுவது போல வந்த கும்பல் ஒன்று பெரு வெளிச்சத்தை அருளின் முகத்தில் பாய்ச்சி உறுதிப்படுத்தியது. பின், எதையோ சிங்களத்தில் பேசி, அவளை இழுத்து சென்றார்கள். முன்பே வீங்கிப்போயிருந்த அவள் கன்னத்தில் தாறுமாறாய் அறைந்து விட்டு ஒரு வாகனத்தில் ஏற்றினார்கள்.

எல்லாம் முடிந்து விட்டதாக நினைத்தாள் அவள். இறுதி நிமிடங்களை எண்ணிக் கொண்டாள். அந்த வாகனத்தின் ஓட்டுனர் தன்னை சிஐடி என்று சொல்லிக்கொண்டான். 4 ஆம் மாடிக்கு விசாரணைக்கு கொண்டு செல்கிறோம் என்றான். அருளிற்கு எதுவும் விளங்கவில்லை. சிங்கத்தின் வாயில் பிடிபட்ட புள்ளிமானிற்கு என்ன எதிர்பார்ப்பு இருக்கப் போகிறது.... எதுவும் கேட்கும் அளவிற்கு நிலைமை புரியவில்லை. என்னை விசாரிக்க என்ன உள்ளது என கேட்க மனம் பதைபதைத்தது. ஆனாலும் கன்னத்தில் அறைந்த முரட்டுக் கரங்கள் தந்த வலி இன்னும் காதில் விண் கூவியதால் மௌனமானாள்,. அந்த எண்ண நிசப்தத்தை அறுத்துப் போட்டது அந்த ஆண் குரல். இது வரை சிங்களத்தில் கத்திய அந்தக் குரல் 'என்னைத் தெரிகிறதா?' என்றது. சரளமாக தமிழில் பேசியது பேரதிர்ச்சி தந்தது. காதைப்பிய்த்தன அந்த வார்த்தைகள். ஆனாலும் மௌனம் கலையாது இருந்தாள் அருள். வாகனம் ஆமை வேகத்தில் குண்டும் குழியுமான பாதையால் சென்றது.

எந்த இடம் என தெரியவில்லை. அருளின் நினைவில் எதுவாக இருந்தாலும் என்ன? விலங்கிடப்பட்ட கைகளுடன் தப்பிவிடவா முடியும்? நடப்பதைக் கண்டு கொள்வோம் என எண்ணி முடிக்க வாகனம் ஓர் குளக்கரையில் சிறிது நேரம் நின்றது.

தன்னை சிஐடி எனக் கூறிக் கொண்டவன் பின்னால் விலங்கிடப்பட்ட கையை கழட்டி விட்டு, ஓர் முழுச் சட்டையைக் கொடுத்தான். போடுமாறு சொன்னான். அப்போதும் அருள் நினைத்தாள்

> **உறவுகளிற்கு என்ன ஆனது? இன்னும் எப்படி எல்லாம் வதைத்தார்கள்? உயிருடன் திரும்பினார்களா? அல்லது வேறு ஏதாவதா? கொன்று புதைத்தார்களா? காணாமல் ஆக்கப்பட்டார்களா?**
> **யாரிடமும் பகிர்ந்து விட முடியாத வலிகள் இவை, வேதனையை விட வேறெதையும் தந்து விடப்படவில்லை என்று தெரிந்தும் சேமித்து வைத்துக் கொள்கிறாள் ஏனெனில், இந்த உண்மைகளை நாம் கூறினால் அன்றி எப்படி வெளியுலகத்திற்குத் தெரியவரும்?**

தன்னை சுட்டு இந்த குளத்தில் போடப்போறான் ஆனாலும் கொஞ்சம் நல்லவன் தான் போல அம்மணமாக இல்லாமல் உடுப்பு தந்துள்ளான்.

சிறிது வினாடியில் வாகனம் மீண்டும் புறப்பட்டது. அப்போது அருளின் குழந்தைகளின் பெயர் சொல்லி விசாரித்தான் அவன். அவளது கணவரையும் கேட்கவே. தயக்கமாகவும் உறுதியாகவும் தெரியாது என்றவளின் மனம் தடுமாறத் தொடங்கியது.

யார் இவன் என்று புரியவில்லை. ஆனாலும் பிள்ளைகள் பெயர் சொல்லுமளவிற்கு நெருக்கமானவனா? என்ற எண்ணங்கள் பல்குழலாய் வெடித்துச் சிதறியது. இன்னும் தெரியவில்லையா?'

இல்லை! என்ற ஒற்றை சொல்லில் முடித்தாள்.

ஒரு பங்குனி வெயில் கொழுத்திக் கொண்டிருந்த நாளொன்றில் (2005 ஆம் ஆண்டு) தெரிந்த ஒருவரின் வாகனத்தில் கிளிநொச்சியில் இருந்த அருளின் வீட்டிற்கு விருந்தாளியாக அன்றி நோயாளியாக வந்தான் ஒருவன். சின்னம்மை (chicken pox) நோயுடன்

# கைதியின் இரவு!!

உடல் முழுவதும் தொப்பளங்கள். நோயின் வலியால் துடித்துக் கொண்டிருந்தவனைக் காட்டி, இவனை பாதுகாப்பாக வீட்டில் வைத்து பராமரித்து மாறியவுடன் தகவல் தருமாறு சொல்லிச் சென்றார் அவர்.

அவனின் உடல் நிலை மோசமாக மாறியது. அருள் மருத்துவத் துறையைச் சேர்ந்தவள் என்பதால் நுணுக்கமாகவும், ஒரு தாயைப் போலும் பதிணைந்து நாட்களாக வீட்டில் வைத்து பராமரித்து, நன்கு தேற்றி, புதுத் தெம்புடன் அனுப்பி வைத்த அவன் தான் இவன் என்ற உண்மை தெரிந்தபோது மனம் எரிமலையாய்க் குமுறியது.

இப்போது அவன் கம்மிய குரலில் சொன்னான், 'நான் உங்களை பல நூறு பெண்புலிகளைக் கைது செய்திருக்கும் இடத்தில் விடப்போகிறேன். அங்கு தான் உங்களிற்கு இப்போ பாதுகாப்பு. நீங்கள் எனக்கு செய்த அளவிற்கு என்னால் எதையும் செய்ய முடியவில்லை. மன்னித்து விடுங்கள். புதிதாகப் போகுமிடத்தில், இங்கிருந்து வந்த தகவல் எதையும் சொல்லிவிடாதீர்கள்! எனச் சொல்லிச் சென்றான்.

அருள் பம்பைமடு பெண்கள் முகாமில் சேர்க்கப்பட்டு விடுவிக்கப்பட்டாள். ஆனாலும், இன்று. உயிரிருந்தும் உறக்கமற்றவளாக வாழ்கின்றாள்.

எண்ணற்ற விடைதெரியா கேள்விகள் அவள் மனதில்.

யார் இவன்?

இன்றும் அவனது முகம் சரியாக நினைவில்லை, பெயர் சரியாகத் தெரியாது.

அவன் நல்லவனா?

நல்லவனாக இருந்தால் என்னை மட்டும் ஏன் காப்பாற்ற நினைத்தான்? அத்தனை அலறல் குரல்களும் இவன் இதயத்தை உருக்கவில்லையா?

அல்லது அவனின் கையறு நிலையா?


எனக்கு மட்டும் செஞ்சோற்றுக் கடன் தீர்த்தானா?

உறவுகளிற்கு என்ன ஆனது? இன்னும் எப்படி எல்லாம் வதைத்தார்கள்? உயிருடன் திரும்பினார்களா? அல்லது வேறு ஏதாவதா? கொன்று புதைத்தார்களா? காணாமல் ஆக்கப்பட்டார்களா?

யாரிடமும் பகிர்ந்து விட முடியாத வலிகள் இவை, வேதனையை விட வேறெதையும் தந்து விடப்படவில்லை என்று தெரிந்தும் சேமித்து வைத்துக் கொள்கிறாள் ஏனெனில், இந்த உண்மைகளை நாம் கூறினால் அன்றி எப்படி வெளியுலகத்திற்குத் தெரியவரும்?

## இந்தியாவின் மே தினம்

இந்தியாவில் முதன்முறையாக மேதினம் சென்னை உயர்நீதிமன்றம் அருகில் கடற்கரையில் 1923ம் ஆண்டு பொதுவுடமைவாதி திரு ம.சிங்காரவேலர் என்பவரால் கொண்டாடப்பட்டது. இந்தியாவில் இன்றளவும் தொழிலாளர்கள் சுரண்டப்பட்டு வாழ்கின்றனர். இவர்கள் இன,மத,சாதி, மொழி கடந்து ஒற்றுமையுடன், உணர்வுடன் போராடினால் மட்டுமே முதலாளிகளின் சுரண்டலை ஒழித்து வெற்றி பெறலாம் என்பதே பொதுவுடமைவாதிகளின் கருத்தாகும்.



ம.சிங்காரவேலர்



# ரணம்

*மரணத்தின் விளிம்பில்*
*நின்று மீண்ட நான்*
*மீள முடியாத*
*நினைவுகள் சுமந்து*
*நடைபிணமாக*
*வாழ்கிறேன்!!*

*அகதியாக அன்னிய*
*நாட்டில்*
*வாழ்ந்திட்ட போதும்*
*விமான இரைச்சல்*
*கேட்கும் போதெல்லாம்*
*பட்ட அவலங்கள்*
*நினைவில் தோன்ற..*
*தனைமறந்து,*
*பதுங்கு குழிக்காய்*
*பாய்ந்திட தோன்றும்!*

*என் செய்கை*
*பார்ப்பவர் கண்களுக்கு*
*பரிகாசமாய்*
*தோன்றினாலும்..*
*பட்டவலியின் பாதிப்பு*
*இன்றும் தொடர்கிறது!*

*முப்படை கொண்டு*
*மூர்க்கமாய் எம்மீது*
*கொத்துக் கொத்தாய்*
*வீசிய குண்டுமழையில்,*
*குருதியில் குளித்த*
*உடலங்கள் சுமந்து*
*கதறியழுத காலங்கள்*
*மறக்குமா?*

*பெற்ற மகன்*
*கைகளில் துடிக்க*
*கட்டிய கணவன் உடல்*
*சிதற செய்வதறியாது*
*திகைத்த கணங்கள்*
*மறந்திடக் கூடுமா?*

*எத்தனை வலிகளை*
*இதயத்தில் சுமந்து*
*எத்தனை இடர்களைக்*
*கடந்து வந்தும்*
*இயல்பாய்*
*வாழ முடியவில்லை!*

*சமாதான வலயம்*
*சமாதான வலயம் - என*
*ஒன்று திரட்டி*
*மேக மழையென*
*குண்டுகள் பொழிந்து,*

*வெற்றி பெற்றதாய்*
*இறுமாப்புடனே,*
*சிங்களதேசமே*
*பாற்சோறு பரிமாறி*
*மகிழ்ந்ததை மறக்குமா?*

*திறந்த வெளிச் சிறையில்*
*பட்ட அவமானங்கள்!*
*வேதனையூடாக*
*விடியலைத் தேடும்*
*பறவையாக!!*

*எத்தனை வலிகள்!*
*எத்தனை துயர்கள்!*
*அத்தனையும் கடந்து*
*அந்நிய தேசமதில்*
*வாழ்வதற்காய்*
*வாழ்கிறோம்!*

*மே 18 மறக்குமா?*
*நீறு பூத்த நெருப்பாய்*
*நெஞ்சமதில் என்றும்*
*கனன்றிடும்!!*
*வலியும் வேதனையும்*
*வாழ்வு முழுவதும்*
*தொடரும்..!*

பவானி



# காணாமல் போன என் கண்மணியே!!

எங்கே தேடுவேன் உன்னை?
நீ நடந்த பாதையெல்லாம்
உனைத் தேடியும் எங்கும்
காணவில்லையே!!
காணாமல் போன
என் கண்மணியே!!

என் செல்வமே!!
நீ எனக்கு
வரமாக வந்த பிள்ளையடா!
உனை கருவினில் சுமந்த போது
என் கற்பனைகளும்
உனைச்சுற்றியே
சிறகடித்துப் பறக்க
நீ பிறந்தாயடா!!
பிரசவவலியின் மறு
ஜென்மம் நீ!
உச்சிமுகர்ந்து
உள்ளம் கையில் தாங்கிய
போது வலி மறந்து போனது.

தத்தி தளிர்நடை போட்டு
அம்மா! என்ற ஒரு சொல்லில்
உலகமே காலடியில்!!
அப்படிஒரு இறுமாப்பு!

காலங்கள் உருண்டோட
கல்வியில் சிறந்தவனாய்,
கலைகளில் வல்லவனாய்,
நின்றாயடா!
தமிழனின் தலைவிதியோ இது?
தொடர் இடப்பெயர்வு
முள்ளிவாய்க்கால்வரை
தொடர..
சிங்கள இராணுவத்தினர்
கைகளில்
என் கண்மணியை
கடைசியாக கண்டேனே!!
முப்படைகளின்
தாக்குதலில் தப்பி,
மூர்க்கர் கைகளில் கண்டேனே!
கலங்கிய கண்களுடன்
எனைபார்த்த பார்வை.!!
என் பெற்றவயிறு
பற்றியெரியுதடா என் செல்லமே!

அன்றிலிருந்து இன்று வரை..,
உன்னைக் காணாத ஏக்கத்தில்
நடைப்பிணமாக
வருவாயா.., என் செல்லமே!
உன் வாயால்
அம்மா என்ற ஒற்றைச்
சொல்லுக்காய்
காத்திருக்கிறேன்
வருவாயா என் செல்லமே!

**அம்முக்குட்டி**



# பிணக்காட்டின் இறுதி நாள்!

வானம் கந்தகப் புகைகளால்
வன்புணரப்பட்டு..
புவியெங்கும் தீட்டுக்கள்
வழிந்து கொண்டிருந்த
விடிகாலைப்
பொழுதொன்று.!!
சாவின் முனகலையும் இழந்து
சத்தங்களைக் குறைத்து
சவமாய்க் கிடந்தது!

சடங்குகள் சம்பிரதாயங்கள்
அந்தரங்கங்கள் பிடிமானங்கள்
துணிச்சல்கள் - எதுவுமற்று
மௌனமாகி முன்செல்லும்
பிசாசுகளின் பின்னால்
நடக்கத் தொடங்கினோம்!!

குழந்தைகளையும்
முட்களையும்
ஒன்றாக்கியது
பிசாசுக் குட்டிகள்
ஈனக்குரல் எடுத்து
கதறும் ஓசை காற்றில்
ஏறி உலகத்தின்
வாசல் வரை சென்றது
வான் இறங்கி வரவே இல்லை!
எந்த வல்லரசுகளும்
நாம் தமிழர் என்பதால்!! .

எம் தெருக்களில்..
கற்களும் முட்களும்
அடங்கிப்போக..
பிணங்களும்
சதைத்துண்டங்களும்
இடையூறாகியது
கால் வழியில்..
பெரும் வெடி ஓசை
அடங்கி சன்னங்கள்
மட்டும் சடசடக்க
வீதி வீதியாய்
முனங்கல்கள் கேட்டன!!

முல்லை-வாய்க்காலில்
ஓடிய குருதியும்!
வட்டு வாகலில் மிதந்த
பிணங்களும்!!
ஒரு துளி தண்ணீருக்காய்
வெம்பிய உயிர்கள்
தேடுவார் அற்று
உருக்குலைந்து போனது!!

இத்தனை காலம்
ஓடிமறைந்தாலும்
வற்றாது நெஞ்சில்
நஞ்சாய் எரிகிறது!
உயிருக்காய்
ஊசலாடிக் கொண்டிருந்த
அன்றைய நாளை..
பிசாசுகளின் வாரிசுகள்
சாத்தான்களின் திருமண
நாளாக்கி எம் இரத்த
விருந்து பரிமாறப்பட்டது!

**மிதயா கானவி**



# நினைவழியாப் பதிவு!

**கலை அமுதினி**

**2009** பெப்ரவரி மாதம் என்று நினைக்கிறேன். தொடர்ச்சியான இடப்பெயர்வுகள், முப்படைகளின் வெறித்தனமான தாக்குதல்கள், நின்று நிதானிக்கும்முன் வந்து விழும் எறிகணைகள், எறிகணைகளிலிருந்து எப்படியாவது தப்பிவிடுவோம் என்ற நம்பிக்கைக் கீற்று உதயமாகும் முன்பே ஒலியைவிட வேகமாக வரும் கிபிர் குண்டுகள்.

குழந்தைகள், வயோதிபர்கள், பெண்கள், ஆண்கள் என்ற பேதமின்றி, கண்முன்னே உடல்சிதறி, பலியானோரின் எண்ணிக்கை ஏராளம். காயமுற்று, குருதிவெள்ளத்தில் போராடிய உறவுகளை காப்பாற்றமுடியாத கையாலாகாத்தனம் என நடைப்பிணமான வாழ்க்கை. அனுபவித்த வலிகளை இன்று கூட எழுதமுடியாதபடி வேதனை பொங்கும் உணர்வு.

சாவு எப்போது வரும் எனத் தெரியாமல், கண்ணீரோடு, ஏதும் தோன்றாமல் குஞ்சுகளை அணைத்த தாய்ப்பறவையாய் நான். அந்தக்கணங்களில் உயிரோடு மீள்வோம் என்ற எண்ணமே தோன்றவில்லை. மனச்சோர்வு, உடற்சோர்வு, நித்திரையின்மை என ஏகப்பட்ட வலிகள். என்ன செய்வது? எமது தலைவிதி இது தானோ? ஒன்றுமே புரியவில்லை. ஒரு சிறிய பகுதிக்குள் எம்மையடைத்து யுத்த விதிமுறைகளுக்கு அப்பால் தன் இரும்புக்கரம் கொண்டு அடக்க முனைந்தது.



நாங்களும் மக்களோடு மக்களாக இடம்பெயர்ந்து மூங்கிலாறு பகுதியை வந்தடைந்தோம். நான் கூட்டுறவு சங்கத்தில் பணியாற்றுவதால் சங்கம் செல்லும் இடத்துக்கு அருகே நாம் இடம் பெயர்ந்தோம். எல்லாவற்றையும் இழந்து, உயிரைமட்டும் சுமந்து வாழ்ந்து கொண்டிருந்தோம். ஒரு தரப்பாள் கொட்டிலில் வாழ்க்கை நகர்ந்தது.

நான் நிவாரணம் வழங்க காலையில் சென்று விடுவேன். பிள்ளைகள் இருவருக்குமாக, தரப்பாள் கொட்டிலுக்குள் இரண்டு அடி ஆழமே ஆன பதுங்குகுழியை நான் அமைத்திருந்தேன். அதற்குமேல், இறுகிய மண்ணில் என்னால் வெட்ட இயலவில்லை.

உரப்பைகள் இல்லாத காரணத்தால் புடவையை எடுத்துக் கிழித்து, நூலோடி, மண் அடைத்து அதைத் சுற்றி அடுக்கியிருந்தேன். பிள்ளைகள் இருவரும் அதனுள்தான் இருப்பார்கள். பெரிய பாதுகாப்பு இல்லை என்றாலும், ஒரு நிம்மதி உணர்வோடு வேலைக்குச் செல்வேன்.

அன்று இரவும், வந்து வீழ்ந்த எறிகணைகள் எத்தனை பேர்களின் உயிர்களை குடித்ததோ? என எண்ணியவாறு, ஈருளியில் சென்று கொண்டிருந்தேன்.

வழமைக்கு மாறாக தெருவெல்லாம் மிக அமைதியாக, இருந்தது. பார்ப்பவர்கள் முகங்களில் ஒரு பீதியைக் காண முடிந்தது. எமது கூட்டுறவு சங்கம் தற்காலிகமாக மூங்கிலாற்றுச் சந்தியிலிருந்து 200 மீற்றர் தொலைவிலேயே அமைந்து இருந்தது. இரவு வீசிய எறிகணைத் தாக்குதலை எண்ணியபடி, எப்போது எங்கே எறிகணை வருமென எண்ணியவாறு மூங்கிலாற்றுச் சந்தியை அடைந்தேன்.

‘‘அங்கே நான் கண்ட காட்சி..!!’’ ‘‘கடவுளே!!!’’

எழுத முடியாமல் கை நடுங்கிறது. இன்று வரை என் நினைவை விட்டு அகலவில்லை. ஆறேழு உருவங்கள். அடையாளம்

தெரியாமல், உடல் கருகி இறந்து கிடந்தார்கள். அவர்களுக்கு அருகே ஒரு டிராக்டர் பெட்டி பாதி கருகிய நிலையில்..அதிலிருந்த நெல்மூட்டைகள் பாதியெரிந்த நிலையிலும், கிடாரம் இரண்டு உருகிய நிலையிலும் காணப்பட்டது.

அதனருகே பேயறைந்த நிலையில் அழவும் முடியாமல் சிலர். என்னால் நிற்க முடியவில்லை. ஆற்றாமை, இயலாமை ஒரு வெறுமையை ஏற்படுத்தியது. யாரோ. எவரோ கடவுளே!! நடுவழியில்.

நான் எப்படி வேலைத்தளத்துக்கு சென்றேன் என்று தெரியவில்லை. சைக்கிளை போட்டுவிட்டு ஓடிச் சென்று கதறி அழுதேன்.

என்ன! என்ன.!

கேட்டவர்களுக்கு பதில் கூட சொல்ல முடியவில்லை.தட்டுத் தடுமாறி சொன்னேன்.

யார் குடும்பமோ?? மொத்தமாக அழிந்து, எல்லாவற்றையும் இழந்து உயிர் காக்க ஓடி, உருத்தெரியாமல் அழிந்து போனவர்களை ஒரு கணம் நினைத்துப் பாருங்கள். இது கதையல்ல. உண்மைச் சம்பவம்.!!

நாம் சுய மரியாதையுடன், எமது உரிமைகளுடன், சுதந்திரமாக வாழ நினைப்பது தப்பா? தன் சொந்த நாட்டு மக்களையே கொன்று புலிகளை அழிப்பதாக கொக்கரிப்பு. அவர்கள் கணக்கில் பத்து மாதக் குழந்தையும், ஏன் பிறந்த ஒருநாள் ஆகாத குழந்தையும் புலிகள்தான்.

உரிமைக்காக போராடும் ஒரு இனத்தை, வேற்று நாட்டுடன் மோதுவது போல யுத்த விதிகளை மீறி, தம் மக்கள் மீதே நடாத்தியது. நாம் உணர்வுகள் கலந்த நிலையில் நிற்க முடியாது. ஏனெனில்

**உரிமைக்காக போராடும் ஒரு இனத்தை, வேற்று நாட்டுடன் மோதுவது போல யுத்த விதிகளை மீறி, தம் மக்கள் மீதே நடாத்தியது. நாம் உணர்வுகள் கலந்த நிலையில் நிற்க முடியாது. ஏனெனில் நிவாரணம் வாங்க வரும் மக்களை நீண்ட நேரம் காக்க வைப்பதும், கூட்டம் சேர விடுவதும் அந்த நேரத்தில் ஆபத்தானது என்பதால் நாம் நிவாரணத்தை வழங்கத் தொடங்கினோம்.**



நிவாரணம் வாங்க வரும் மக்களை நீண்ட நேரம் காக்க வைப்பதும், கூட்டம் சேர விடுவதும் அந்த நேரத்தில் ஆபத்தானது என்பதால் நாம் நிவாரணத்தை வழங்கத் தொடங்கினோம்.

அந்த எரிந்த உருவங்கள் சிறிது நேரத்தில் அப்புறப்படுத்தப்பட்டிருந்தன. இது ஒரு சம்பவம்தான். இதைப்போல எத்தனை எத்தனை கண்டோம்?

இன்று இவ் இடப்பெயர்வில் தப்பிப்பிழைத்த எத்தனை பேருக்கு இது ஞாபகம் இருக்கும்? தெரியவில்லை

நாம் எமது கூட்டுறவுப் பணிகளின் போது, எம் சங்கத் தலைவரையும், எமது களஞ்சியப் பொறுப்பாளரையும், எமது பணியாளர் இருவரின் துணைவிகள், குழந்தைகள் எனப் பலரையும் இழந்துள்ளோம். இத்தனை அத்துமீறல்களையும் செய்த அரசு கூறுகிறது யுத்த மீறல் செய்யவில்லையென.

நாம் ஒவ்வொருவரும் நாம் பார்த்த, அனுபவித்த வலிகளை ஆவணப்படுத்த வேண்டும். 13 ஆண்டுகள் கடந்த நிலையிலும் எமக்கு இன்னமும் நீதி கிடைக்கவில்லை.





# கட்டற்ற இணையவழியும் தடுமாறும் இளையோரும்



கனலி

கைபேசிகளை தகவல் தொடர்பு சாதனமாக மட்டும் உபயோகித்த காலம் மலையேறி விட்டது. நவீன இலத்திரனியல் உலகில் இதன் தேவை அத்தியாவசியமான ஒன்றாக மாறிவிட்டதால் பெரியவர், சிறியவர், ஆண், பெண் என்ற பாகுபாடு எதுவுமின்றி இரவு பகலாக இத்தகைய இலத்திரனியல் உபகரணங்களுடன் குறிப்பாக 'ஸ்மாட் ஃபோன்' (smart phone ) களுடன் தமது நாள் முழுவதையும் கழிப்பது வழமையாகி விட்டது. முன்பு நண்பர்களுடன், உறவினர்களுடன் சந்தோசமாகச் சிரித்துப் பேசிக் கழித்த காலம் போய் இப்போது தமக்குத்தாமே பேசுவதையும் சிரிப்பதையுமே காணக்கூடியதாக இருக்கிறது. ஒரே வீட்டினுள்ளேயே, கைபேசி அழைப்புகளினூடும் தகவல் பரிமாற்றத்தினூடும் தொடர்பாடும் விந்தை இந்த யுகத்தில்தான் நடைபெறுகிறது. அருகில் இருப்பவரைக்கூட கண்டு கொள்ளாமல் கைபேசியில் மூழ்கிக் கிடப்பது என்ற நிலை வேதனையிலும் வேதனை.

நாணயத்திற்கு இரு பக்கம் போல, எல்லா நல்ல விடயங்களிலும் தீயவையும் இருக்கத்தான் செய்கின்றன. நல்லனவற்றை மட்டும் தேர்ந்தெடுத்து அவற்றைக் கடைப்பிடிப்பதன் மூலம் மட்டுமே எங்கள் வாழ்வை சரியான பாதையில் நகர்த்திச் செல்ல முடியும். இளையோரைப் பொறுத்த வரையில் அவர்களுக்கு சரியான வழிகாட்டுதல்கள் இன்றியமையாததாகின்றன. கொரோனா பெருந்தொற்று உலகம் முழுவதிலுமுள்ள கல்வி முறையில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தி விட்டது. முன்பு பண பலம் உடையவர்களுக்கு மட்டுமே கைக்கெட்டிய இத்தகைய இலத்திரனியல் உபகரணங்கள், பெருந்தொற்று காலத்தில், பணபலம் உள்ளோர் இல்லாதோர் என்ற வேறுபாடு இல்லாமல், எல்லாக் குழந்தைகளும் இணையவழியில் கல்வியைத் தொடர வேண்டிய. கட்டாயம் காரணமாக, எல்லோரின் பாவனையிலும் இடம்பெற்று விட்டது.

இதனால் மிக இளம் வயதினர் கையில்கூட கைபேசி இருப்பதையும், படிப்பு தவிர்ந்த நேரமெல்லாம் இணையவழி விளையாட்டு, அரட்டை, தேவையில்லாத விடயங்களைக் கூட இணையத்தில் தேடுவது என்று வீண் பொழுது கழிக்கும் வழக்கம் ஏற்பட்டு விட்டதையும் பார்க்க முடிகிறது. பெற்றவர்களில் சிலர் தமக்குத் தொல்லையில்லாமல் இருந்தால் போதும் என்ற எண்ணத்தில், கட்டுப்பாடற்ற இணையத்தில் குழந்தைகள் எதைப் பார்க்கிறார்கள் என்பதைக்கூட கண்டு கொள்வதில்லை. அதையும் தாண்டி சில பெற்றோர் தங்கள் கைபேசிகளைக் குழந்தைகளிடம் கொடுத்து அவர்களின் கவனத்தை அங்கு திருப்பி, தாங்கள் ஓய்வெடுக்கிறார்கள்.

விடலைப் பருவத்தினரைப் பற்றிக் கேட்க வேண்டியதில்லை. அவர்கள் பெற்றோரிடம் மிக அரிதாகவே விடயங்களைப் பகிர்ந்து கொள்கின்றனர். தனிமையில் கைபேசியுடன் பெரும் பொழுதைக் கழிக்கிறார்கள். 'இந்த வயதில் இப்படித்தான் இருக்கும்' என்று அநேகமான பெற்றோர் இதனைக் கண்டு கொள்வதில்லை அல்லது 'சொல்வதைக் கேட்பார்களா?' என்று அலுத்துக் கொள்வார்கள். ஆனால், கட்டுப்பாடற்ற இணையவழி மிகவும் ஆபத்தானது. அண்மைக் காலங்களில், தானாக விரியும் விளம்பரங்களில் (pop up adverts ) அதிகளவில் நீலப்படங்கள் வெளியிடப்படுவதும், அதைப் பார்க்கும் இளையோரின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதும் ஒரு அதிர்ச்சிகரமான உண்மை.



**மொத்த சமுதாயத்தையுமே ஆட்டிப் படைக்கும் ஒரு சீர்கேடாக இந்த நிலை உருமாறியிருப்பதை சமூக ஆர்வலர்கள் வேதனையோடு சுட்டிக் காட்டுகிறார்கள். அரசுகள் உடனடியாக ஆவன செய்து இளைய தலைமுறையைக் காக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்திருக்கிறர்கள். பெற்றோர் உடனடியாக இதனைக் கருத்தில் எடுக்க வேண்டும் என்று பரிந்துரைக்கிறார்கள். இளைஞர் யுவதிகள் தனிமையில் பொழுதைக் கழித்து இப்படியான ஒழுக்கச் சீர்கேடுகளினுள் மூழ்கித் திளைப்பது, இளையோரிடையே மனச் சிதைவை அதிகரித்திருப்பதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. அண்மைக் காலங்களில், என்றுமில்லாத அளவுக்கு பாலியல் வன்புணர்வுகள் அதிகரித்திருப்பதும் இதன் ஒரு வெளிப்பாடாகவே பார்க்கப்படுகிறது.**



மொத்த சமுதாயத்தையுமே ஆட்டிப் படைக்கும் ஒரு சீர்கேடாக இந்த நிலை உருமாறியிருப்பதை சமூக ஆர்வலர்கள் வேதனையோடு சுட்டிக் காட்டுகிறார்கள். அரசுகள் உடனடியாக ஆவன செய்து இளைய தலைமுறையைக் காக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்திருக்கிறர்கள். பெற்றோர் உடனடியாக இதனைக் கருத்தில் எடுக்க வேண்டும் என்று பரிந்துரைக்கிறார்கள். இளைஞர் யுவதிகள் தனிமையில் பொழுதைக் கழித்து இப்படியான ஒழுக்கச் சீர்கேடுகளினுள் மூழ்கித் திளைப்பது, இளையோரிடையே மனச் சிதைவை அதிகரித்திருப்பதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. அண்மைக் காலங்களில், என்றுமில்லாத அளவுக்கு பாலியல் வன்புணர்வுகள் அதிகரித்திருப்பதும் இதன் ஒரு வெளிப்பாடாகவே பார்க்கப்படுகிறது.

யார் எந்தக் கட்டுப்பாட்டை விதித்தாலும் குழந்தைகளிடையே ஒழுக்கத்தையும் மனக் கட்டுப்பாட்டையும் பேணாதவரை எதுவுமே நடைமுறைச் சாத்தியமில்லை. இதில் தலையாய பங்கு பெற்றோருக்கே உள்ளது. அடுத்ததாக, ஆசிரியர்கள். அர்ப்பணிப்பு நிறைந்த ஆசிரியர்கள் மத்தியில் படிக்கும் பிள்ளைகளுக்கு பாலியல் தொல்லை தரும் ஆசிரியர்களும் இருப்பது வேதனைக்குரியது. அவர்கள் இந்த சமூகத்தின் முன்னால் அம்பலப் படுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டியவர்கள். பிள்ளைகள் என்ன செய்கிறார்கள் என்பதை அவதானிப்பதிலும், தனிமையில் நேரத்தை செலவிடும் பிள்ளைகளை நல்ல, ஆக்கபூர்வமான செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதிலும் பெற்றோருக்கும் நல்லாசிரியர்களுக்கும் உறுதுணையாக இருக்க வேண்டியது சமுதாயத்தில் உள்ள எல்லோரினதும் கடப்பாடாகும்.





மாலினி மோகன்

# பொருளாதார நெருக்கடியும், இலங்கைப் பெண்களும்

கொரோனா பெருந்தொற்றின் காரணமாக கடந்த மூன்று ஆண்டுகளாக உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட பொருளாதாரத்தின் மந்த நிலையானது, இலங்கையின் பொருளாதார நெருக்கடியை விரைவு படுத்தியது எனலாம். இதனால் 2021 ஆம் ஆண்டின் வெளிநாட்டுக் கடன், நாட்டின் மொத்த உற்பத்தியில் 101% ஆக உயர்ந்தது. இதனால் மக்கள் தனது அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமல் போராடிக் கொண்டிருக்கின்றார்கள். இலங்கையின் சாதாரண குடிமக்கள் உயர்ந்து வரும் வாழ்க்கைச் செலவைத் தாங்கிக் கொள்ள முடியாத நிலை தொடர்கிறது.

நாட்டின் தற்போதைய இப் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண முடியாமல் மீண்டும் மக்களை அவலத்தில் தள்ளும் இலங்கையின் அரசாங்கத்தை உடனே பதவி விலக வேண்டும் எனக் கோரி நாடு பூராகவும் பல்வேறு போராட்டங்கள் வலுப்பெற்று எங்கும் தொடர்ந்த வண்ணம் இருக்கின்றன. தற்கால கொரோனா தொற்றின் தாக்கம், தொடர்ச்சியான எரிபொருள் தட்டுப்பாடு, பொருட்களின் விலையதிகரிப்பு, மின்சார துண்டிப்பு என்பன இலங்கை மக்களின் வாழ்வியலில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

போல சிறக்கும் ஒரு வாழ்வு என்ற நிலையற்ற நிலையில் இலங்கையில் வாழும் குடியினர் தமது அநீதிக்கு எதிரான போராட்டங்கள் மூலம், ஆணுக்கு பெண் நிகராக நின்று போராடிக் கொண்டிருக்கிறார்கள். பாரதி கண்ட புதுமை பெண்ணாய் நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி வீழ்ச்சி எனும் காரணி பெண்களை போராட்டகாரர்களாக மீண்டும் ஒரு பரிமாணமாக காட்சியளிக்க செய்துள்ளது. எனினும் சமகாலத்தில் பெண் வர்க்கத்தினர் தமது அன்றாட வாழ்க்கையை முன்னெடுத்து செல்வது பெரும் சவால்களுக்கு மத்தியிலே தான் என்பதும் கண்கூடு.





அத்தியாவசியப் பொருட்களுக்காக நாள் பூராவும் தொடர்ந்து எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும், கடைகளிலும் வரிசை காத்து நிற்பதால் வீட்டில் தனது குடும்பத்தை கவனிக்க முடியாமலும், உரிய பொழுதில் பணிகளுக்கு செல்ல முடியாமலும் போராடிக் கொண்டிருக்கிறாள். ஆயினும் அவளின் நாளாந்த கடமை பொறுப்புக்களை அவள் தட்டிக்கழித்து விடவில்லை என்றே கூற வேண்டும். எந்த சூழ்நிலையிலும் பெண்ணானவள் தன்னை அச்சூழ்நிலைக்கு ஏற்றாற் போல் மாற்றிக் கொள்கிறாள்.

ஒருபோதும் இல்லா வண்ணம் மக்கள் கூட்டம் தெருவில் எங்கும் எப்பொருளுக்கும் வரிசையில் நிற்கும் துர்ப்பாக்கிய நிலை இலங்கையை இன்று நெருக்கடிக்கு உள்ளாக்கியுள்ளதோடு, அதுவே இன்று பேசுபொருளாகவும் உள்ளது. அதிலும் பெண்களின் நிலை சவால் மிக்க நிலையில் உள்ளது. அத்தியாவசியப் பொருட்களுக்காக நாள் பூராவும் தொடர்ந்து எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும், கடைகளிலும் வரிசை காத்து நிற்பதால் வீட்டில் தனது குடும்பத்தை கவனிக்க முடியாமலும், உரிய பொழுதில் பணிகளுக்கு செல்ல முடியாமலும் போராடிக் கொண்டிருக்கிறாள். ஆயினும் அவளின் நாளாந்த கடமை பொறுப்புக்களை அவள் தட்டிக்கழித்து விடவில்லை என்றே கூற வேண்டும். எந்த சூழ்நிலையிலும் பெண்ணானவள் தன்னை அச்சூழ்நிலைக்கு ஏற்றாற் போல் மாற்றிக் கொள்கிறாள்.


மேலும் கூறுவதாயின் இலங்கையின் தற்போதைய ஊரடங்கு பொழுதுகளிலும் தனக்கென ஒரு சுயதொழிலை வீட்டிலிருந்தவாறே பார்த்துக் கொண்டு தன்னை இன்னுமொரு படி உயர்த்திக் கொள்கிறாள். தையல், விவசாயம், 'இணையவழி வணிகம்' என பல துறைகளில் தன்னையும் வளர்த்ததுக் கொண்டு தன் குடும்பத்தையும் காக்கும் பெண்ணினம் போல் உயர்ந்த இனம் உலகில் இல்லை எனலாம். முழு இலங்கையும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கும் போதும் தன் குடும்பத்தை சிக்கனத்தின் விளிம்பில் வைத்து சிதையாமல் காக்க பெண்களாலே மட்டுமே முடியும்.





அங்கம்: 01

# வங்கம் தந்த பாடம்



**முன்னுரை:**

அடக்கப்படும் மக்கள், ஒரு கட்டத்திற்கு மேல் அதைப் பொறுக்க முடியாமல் கிளர்ந்து எழுகின்றனர். புரட்சிகள் வெடிக்கின்றன. தாய்மண்ணையும் மக்களையும் நேசிப்பவர்களை புரட்சியாளர்கள் ஆக்குகின்றது இந்த அடக்குமுறை. போராளிகள் உருவாக்கப்படுகிறார்கள். தமது நலனை மட்டுமே பாதுகாக்கும் ஏகாதிபத்திய நாடுகளும், முதலாளித்துவ அரசுகளும் இந்த விடயத்தில் கூட்டாகச் சேர்ந்து மக்களின் நலனுக்கும், பாதுகாப்பிற்குமான இந்தப் புரட்சிகளையும், விடுதலைப் போராட்டங்களையும் நசுக்கி விடுகின்றன. இதன்போது பெருமளவு இரத்தம் சிந்தப்படுகின்றது, படுகொலைகள் நடைபெறுகின்றன. இவை எதற்குமே இந்த வர்க்கத்தினர் அஞ்சுவதில்லை.

வங்காளதேசம் என்ற நாட்டின் உருவாக்கத்தின் பின், அதனை இந்தியாவுடன் இணைப்பதற்காக, இந்தியாவுடன் இணைந்து கூட்டுச்சதி செய்தது வங்காளதேச முதலாளித்துவ அரசு. அதனை எதிர்த்து ஒரு பெரும் புரட்சி கிளர்ந்தது. அந்தப் புரட்சி, அமெரிக்க 'சி ஐ ஏ' யின் உதவியுடன், இந்திய – வங்காள தேச அடக்குமுறை அரசுகளால் நசுக்கப்பட்டன. புரட்சிக்கு முக்கிய காரணமானவராக இருந்த 'கேணல் அபுதாகிர்' தூக்கிலிடப்பட்டார். தூக்கிலிட முன்னர், அபுதாகிர் நிகழ்த்திய நீதிமன்ற சொற்பொழிவு, தடைகளையும் மீறி இரகசியமாக வெளிநாடு சென்றடைந்து மொழிபெயர்க்கப் பட்டது.

உலகில் எத்தனையோ விடுதலைப் போராட்டங்கள் வெற்றி பெற்றிருக்கின்றன எத்தனையோ போராட்டங்கள் அடக்குமுறையாளர்களின் கூட்டுச்சதியால் நசுக்கப் பட்டிருக்கின்றன. அடக்கப்படும் இனங்கள், இந்த வரலாறுகளிலிருந்து கற்றுக்கொள்ளும் பாடம் அந்த இனங்களின் விடுதலைக்கு வழிகாட்டியாகும். இலங்கையின் தற்போதைய நிலையில், காலத்தின் தேவைகருதி, 'வங்கம் தந்த பாடம்' என்ற பெயரில் வெளிவந்த அபுதாகிரின் நீதிமன்ற உரை தொடராக மறுபிரசுரம் செய்யப்படுகிறது.



**பங்குனி 26 அன்று, ஜெனரல் யகியாகான் வானொலியில் பேசுவதை நாம் கேட்டோம். அக்கட்டம் மிகவும் பயங்கரமான கட்டமாகும். ஒரு நாட்டின் பிறப்பு வேதனைகளை என்னால் உணரக்கூடியக் இருந்தது. பாக்கிஸ்தான் இராணுவத்தின் நடவடிக்கைகளுக்கு எதிரான வெறுப்புணர்வுகளை நான் நேரடியாகக் காட்டியதால், எனது மேலதிகாரிகளின் சந்தேக்களுக்கு நான் ஆளானேன். குயாட்டவில் நடந்த பயிற்சி வகுப்பு நிறுத்தப்பட்டு, நாம் எமது இராணுவப் பிரிவுகளுக்குச் செல்லுமாறு பணிக்கப்பட்டோம்.**

## கேணல் அபு தாகிர் ( Colonal Abu Taher )

நீதிமன்றத் தலைவரே! ஏனைய உறுப்பினர்களே!

உங்கள் முன்னால் குற்றவாளியாக நிற்கும் இந்த மனிதன் எமது நாட்டுக்காக இரத்தமும் வியர்வையும் சிந்தியவன். இம் மனிதன் தனது உயிரையே இழக்கத் துணிந்தவன் எனச் சரித்திர ஏடுகள் கூறும். இவனது சாதனைகள் ஒருநாள் நியாயப்படுத்தப்படும். இந்த நாட்டுக்காக இவனது தொழில், சிந்தனைகள், கனவுகள் பட்ட உணர்வுகளை இப்பொழுது கூறவும் முடியாது, விளக்கவும் முடியாது.

என்ன விசித்திரம்!

என் இரத்தத்தினால் என்னை பிணைத்துக்கொண்ட இந்த நாடு எப்படி என்னை நிராகரிக்க முடியும்?

அதிகார பீடத்தில் நான் இருத்திய அரசும், நான் புதுவாழ்வு கொடுத்த மனிதனும் எனக்கு முன்னால் நீதிமன்ற வடிவில் இருக்கின்றன. நாட்டுத் துரோகத்திற்கும், ஏனைய உருவாக்கப்பட்ட குற்றச்சாட்டுகளுக்குமாக அவர்கள் என்னை விசாரிக்கத் துணிகின்றனர். எனக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட குற்றச்சாட்டுகள் விசமத்தனமானவை, ஆதாரமற்றவை, சூழ்ச்சியானவை, முழுப்பொய்கள்.

### நான் ஒரு பூரண நிரபராதி!

இந் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட ஒரு குற்றச்சாட்டில், எனது தூண்டுதலினால் 1975ம் ஆண்டு கார்த்திகை மாதம் 6ம், 7ம் திகதிகளில், டாக்கா [Dacca ] இராணுவத் தளத்திலிருந்த போர் வீரர்கள் புரட்சி செய்ததாகவும், இதனால் ஒரு சதிகாரக் குழுவின் கபடமான நோக்கம் முறியடிக்கப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது. மேஜர் ஜெனரல் சியாவுர் ரகுமான் [ Ziaur Rahuman ] விடுதலை செய்யப்பட்டு இந்த நாட்டின் சுதந்திரம் காப்பாற்றப்பட்டது. இந்த நடவடிக்கை தேசத்துரோகமாயின் நான் குற்றவாளி. நான் ஏதாவது குற்றம் இழைத்திருந்தால் அக்குற்றம் சட்டத்தையும் ஒழுங்கையும் மீண்டும் நிலைநாட்டியதாகும். நாட்டின் சுதந்திரத்தை நிலைநாட்டிய குற்றமாகும். இராணுவத் தளபதியைச் சிறைவாசத்திலிருந்து மீட்ட குற்றமாகும். பங்களாதேஷின் இறைமையில் மீண்டும் நம்பிக்கையை ஊட்டிய குற்றமாகும்.

இந்த உண்மையை நிலைநாட்டுவதற்கு, 1976ம் ஆண்டு ஆனி மாதம் 27ம் திகதி முதல் எனக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்ட பயமுறுத்தல்களையும், எனக்கு இழைக்கப்பட்ட சித்திரவதைகளையும் பற்றி நான் மீண்டும் ஞாபகப்படுத்தத் தேவையில்லை. இந்த உண்மை 7ம் திகதி கார்த்திகை 1975 ம் ஆண்டு எமது சொந்த முயற்சியால் பதவியில் இருத்திய சாயிம் [ Sayem ] இற்கும் அவரது அரசாங்கத்திற்கும் தெரியும். சகல அரசியற் கைதிகளும் விடுதலை செய்யப்பட வேண்டும் என்றும் அரசியல் நடவடிக்கைகள் நடைபெற வேண்டும் என்றும் எமக்கிடையே அங்கீகரிக்கப்பட்ட உடன்பாடு இருந்தது. இந்த உண்மை எனது நாட்டு மக்களுக்கும் தெரியும். அவர்கள் அதனை நன்றியுடன் நினைவில் வைத்துக் கொள்வார்கள்.

என்னை இந்தச் சிறையில் வைத்து ஒரு தரங்குறைந்த நீதிமன்றத்தால் விசாரிக்க முற்படுவது இந்த நாட்டுக்கே அவமானமாகும். உங்களுக்கு என்னை விசாரிக்க உரிமையில்லை.

எனக்கு எதிராகத் தொடரப்பட்டுள்ள பொய்யான, புனையப்பட்ட குற்றச்சாட்டுகளை நிராகரிக்க முன்னர், நான் உங்களுக்கு எமது ‘வீர தேசிய விடுதலை இயக்கத்தின்’ நாட்களை ஞாபகப் படுத்துகிறேன். இக் கட்டத்தில் இது மிகவும் முக்கியமாகும்.

பாக்கிஸ்தான் இராணுவம் எமது மக்களுக்கு எதிராக மோசமான நடவடிக்கைகளை மேற்கொண்ட 1971 பங்குனி 25ம் திகதியை நான் ஞாபகப்படுத்துகிறேன். எமக்கெதிராகத் திணிக்கப்பட்ட போரை வெல்வதைத் தவிர எமக்கு வேறு வழியிருக்கவில்லை. நாம் தோற்கடிக்கப் பட்டிருந்தால் எம்மீது மிக மோசமான அடிமை வாழ்வு திணிக்கப் பட்டிருக்கும். பாக்கிஸ்தான் இராணுவ அரசு பத்திரிகைகள் மூலம் வங்காளிகள் உயர் கல்விக்குத் தகுதியற்றவர்கள் எனக் கூறியது. இதனை இரகசியமாக வைத்திருக்கவில்லை. வங்காளிகள் தேசப்பற்று அற்றவர்கள், அவர்களது கலாசாரம் தரம் குறைந்தது என்றது. அவர்கள் ஒரேயொரு மொழியாக உருது மொழியை மட்டுமே கற்கவேண்டும் எனக் கூறியது.

எனது மக்களின் நிலைமையை உணரத் தொடங்கிய நாள்முதல் பாக்கிஸ்தானின் கருத்தை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. வங்காளிகள் போன்ற மக்களால் ஒரு சுதந்திர நாட்டை அமைத்து, தமது தேசிய அபிலாசைகளைப் பூர்த்திசெய்ய முடியாது என்ற கருத்தை நான் ஏற்றுக் கொள்ளத் தயாரில்லை. அந்த நேரம் முதல் நான் எப்பொழுதும் எமது மக்களின் விடுதலையைப் பற்றியும் அவர்களுக்கு ஒரு நாட்டை அமைப்பதைப் பற்றியுமே சிந்தித்தேன். பாக்கிஸ்தான் இராணுவத்திலிருந்து எத்தனை வங்காளி அதிகாரிகள் ஒரு சுதந்திர பங்களாதேஷ் பற்றிச் சிந்தித்தார்களோ எனக்குத் தெரியாது, ஆனால், என்னைப் பற்றி நான் இவ்வளவு மட்டும் கூற முடியும், சுதந்திரக்கனவு என்னை ஒரு நட்சத்திரம் போல எப்பொழுதும் கவர்ந்து இழுத்தது.

பாக்கிஸ்தான் இராணுவத்தில், ‘வங்காளிகள் – அது தேசத் துரோகிகளின் நாடு’ என நாம் கற்பிக்கப்பட்டோம். அவர்கள் சேவை செய்யவே பிறந்தவர்கள், அவர்களை உண்மையான முஸ்லிம்களாகவும், நாட்டுப் பற்றுள்ளவர்களாகவும் ஆக்குவது பாக்கிஸ்தானியரின் கடமையெனக் கற்பிக்கப்பட்டோம். அவர்கள் எங்களை எவ்வாறு நையாண்டி பண்ணினார்கள் என்பதையும், புறக்கணித்தார்கள் என்பதையும் என்னால்

ஞாபகப்படுத்த முடிகிறது. அந்த நாட்கள் மேற்கு பாக்கிஸ்தானிலிருந்த எமக்கு மிகவும் சோதனையான நாட்களாகும். நாட்டின் அழைப்பை ஏற்றுக்கொள்ள நான் தயங்கவில்லை. இராணுவ அரசின் மிக மோசமான நோக்கங்கள் எமக்குத் தெரியாமல் இருக்கவில்லை. ''எல்லாவற்றையும் எரியுங்கள், காண்பவர்களைக் கொல்லுங்கள்''!! என்று இராணுவத் தலைமைப்பீடத்திலிருந்து கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

நான் பாக்கிஸ்தானிலிருந்து தப்பியோடி, விடுதலைப் போராட்டத்தில் சேரத் தயங்கவில்லை. இந் நீதிமன்றின் தலைவருக்கு நான் பாக்கிஸ்தான் இராணுவத்தில் ஒரு சாதாரண போர்வீரன் அல்ல என்பது தெரியும். நான் முதன் முதலில் பலூச்சி இராணுவப் பிரிவில் சேர்ந்தேன். பின்பு, பாக்கிஸ்தான் இராணுவத்திலுள்ள விசேட சேவைகள் குழுவில் சேர்ந்தேன். 6 வருடங்கள் நான் இந்த விசேட சேவைகள் பிரிவில் பணியாற்றினேன். போர்வீரனாகவும், அதிகாரியாகவும் நான் எதிரிக்கெதிராக நேருக்குநேர் போராடத் தயங்கவில்லை. இந்திய – பாக்கிஸ்தான் போரில் நான் காஷ்மீர் முனையிலும், சியால்கோட் பகுதியிலும் போராடினேன். அந்தப் போரில் பட்ட காயங்கள் எனக்கு இன்னும் உண்டு.

'மரூன் பராசூட்' பரிசு வழங்கப்பட்ட முதலாவது வங்காளி அதிகாரி நானே. எனக்கு ஒரே நேர்கோட்டில் 135 பராசூட் பாய்ச்சல்கள் பாய்ந்த பெருமை உண்டு. என்னுடைய சேவைகளுக்காக நான் ஐக்கிய அமெரிக்காவிற்கு வெவ்வேறு வகுப்புகளில் கலந்துகொள்ள அனுப்பப்பட்டேன். கொலம்பஸ் ஜோர்ஜியாவில் ரேஞ்சர் பயிற்சி அதிகாரிகளால் ரேஞ்சர் பரிசு வழங்கப்பட்டேன். வட கரோலினாவிலுள்ள விசேச அதிகாரிகள் பயிற்சி நிலையத்திலிருந்து விசேச பட்டதாரியாக வெளியேறினேன். அந்தக் காலகட்டம் வரையும் எந்தவொரு வங்காளி அதிகாரியும் இப்படிப்பட்ட சேவைக்கான பரிசுகளைப் பெற்றிருக்கவில்லை என்பதை இக்கட்டத்தில் ஞாபகப் படுத்துகிறேன்.

இராணுவ அரசின் பாசிச, காட்டுமிராண்டித்தனமான தாக்குதல் நாட்களை ஞாபகப்படுத்துவோம். 1970ம் ஆண்டு, பொதுத் தேர்தலின் போது, நான் ஐக்கிய அமெரிக்காவில் ஒரு பயிற்சிக்கெனச் சென்றிருந்தேன். மார்கழி மாதம் நான் மேற்குப் பாக்கிஸ்தானுக்குத் திரும்பி வந்த பொழுது தேர்தல்கள் முற்றுப்பெற்று விட்டிருந்தன. ஷேக் முஜிபுர் ரகுமானின் கட்சியான 'அவாமி லீக்' பெரும்பான்மை ஆதரவு பெற்றிருந்தது. நான் திரும்பி வந்தவுடன் பலதரப்பட்டவர்களுடன் கருத்துக்களைப்


12 SPECIAL The Daily Star

The trial of Colonel Abu Taher



பரிமாறினேன். சிவிலியனிடம் அரசு அதிகாரம் கையளிக்கப்படாது என நான் உணர்ந்தேன். இராணுவ அரசும் பூட்டோவும் ( பாக்கிஸ்தான் அரசியலில் ஒரு சாபக்கேடு ) ஒருபொழுதும் அவாமிலீக் இற்கு நியாயமான ரீதியில் அதிகாரம் வழங்கத் தயாராக இருக்கவில்லை. ஒரு வங்காளியும் அதிகாரத்திற்கு வரக்கூடாது என அவர்கள் தீர்மானமாக இருந்தார்கள். ஷேக் முஜிபுர் ரகுமானை அங்கீகரிக்கவோ ஏற்றுக் கொள்ளவோ அவர்கள் தயாராக இருக்கவில்லை. என்னால் ஆபத்தான சமிக்ஞைகளை உணரக்கூடியதாக இருந்தது. எனவே, மாசி மாதம் எனது மனைவியையும் குடும்பத்தினரையும் எனது சொந்த இடமான 'மயிமன் சிங்' இற்கு அனுப்பினேன். குளிர்காலத்தின் குளிர் அப்போது எம்முடனிருந்தது.


வங்காளிகளுக்கு ஒரு நாடு ( பங்களாதேஷ் ) அமைவதை பாக்கிஸ்தானியர்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று எனக்குத் தெரியும். எமது மக்களை விடுதலையாக்கும் நாள் அண்மித்து விட்டது போல நான் உணர்ந்தேன். எத்தனை பேர் இப்படி உணர்ந்தார்களோ எனக்குத் தெரியாது. நாட்கள் செல்லச் செல்ல நாம் விரைவான கருத்து மாற்றங்களுக்கு உள்ளாகி, நடைபெறப் போகும் நிகழ்ச்சிகளுக்கு ஆயத்தப்படுத்தத் தொடங்கினோம்.

25ம் திகதி பங்குனி மாதம் நான் மேற்குப் பாக்கிஸ்தானில் உள்ள குயாட்டா ( Quetta ) என்ற இடத்திலுள்ள உயர் பல நுட்பக் கல்லூரிக்குச் சென்றிருந்தேன். அந்த இரவு பூராவும் என்னால் அமைதியாக இருக்க முடியவில்லை. இரவு பூராவும் வெறிச்சோடிக் கிடந்த குயாட்டா வீதிகளில் நான் நடந்தேன். என்ன நடக்கிறது என்று எண்ணங்களை ஒருங்கிணைத்து சிந்திக்க முயற்சித்தேன். இப்பொழுது கூட எமது மக்கள்மீது இழைக்கப்பட்ட கொடுமைகளை என்னால் நினைத்துப் பார்க்க முடியவில்லை. இது வங்காள தேசத்தின் இருதயத்தில் இழைக்கப்பட்ட மிக மோசமான சித்திரவதையாகும்.

பங்குனி 26 அன்று, ஜெனரல் யகியாகான் வானொலியில் பேசுவதை நாம் கேட்டோம். அக்கட்டம் மிகவும் பயங்கரமான கட்டமாகும். ஒரு நாட்டின் பிறப்பு வேதனைகளை என்னால் உணரக்கூடியக் இருந்தது. பாக்கிஸ்தான் இராணுவத்தின் நடவடிக்கைகளுக்கு எதிரான வெறுப்புணர்வுகளை நான் நேரடியாகக் காட்டியதால், எனது மேலதிகாரிகளின் சந்தேகங்களுக்கு நான் ஆளானேன். குயாட்டவில் நடந்த பயிற்சி வகுப்பு நிறுத்தப்பட்டு, நாம் எமது இராணுவப் பிரிவுகளுக்குச் செல்லுமாறு பணிக்கப்பட்டோம்.

தொடரும்....

# பெண்!



விதவையாக இருந்தாலும்
வேதனைப் படுத்தாதீர்!
கனவுகள் சுமந்த
கல்யாண வாழ்வு
கானல் நீரானாலும்
அவளும் பெண் தானே!
மறவாதீர்கள்..

உடன் கட்டையேறி
உயிர் விட்ட காலம்
மலையேறிப் போச்சு.
மொட்டையடித்து
வளையல் உடைத்து
சிறு பெண்ணின்
கனவுகள் சிதைத்து
மூலையில் முடக்கினீர்.

வெள்ளைப் புடவையை
அவளுக்கு தந்து
வர்ணப்புடவையில்
மற்றவர் வலம்வர,
சொல்ல முடியாத
துயரில் வாடும்
அவள் மனம் புரியாதா?

முழிவியளத்துக்கு
ஆகாது மூதேவி!
நல்லது நடக்கும் போது
எங்கே வந்தாய்? - என
ஏசிப் பேசிடும் கூட்டத்தில்,
வலையில் விழுந்த
மீனாக - அவள்
துடிப்பது தெரிகிறதா?

தலை நிறைய பூச்சூடி
கைநிறைய வளைபோட்டு..
கொலுசு அணிந்த
பாதத்துடன்
துள்ளி வர ஆசை
தான்
சம்பிரதாய சடங்குகள்
கட்டிப்போட
மீளமுடியாத
சிறையில் வாடும்
அவளும் ஒரு பெண்தான்!!

இதயா

# மே தினம்



இது சர்வதேச தொழிலாளர் தினமாகும். உலகத் தொழிலாளரின் ஒற்றுமையும் உறுதியையும் குறிக்கும் தினமாகும். ஒற்றுமையாகப் போராடினால் வெற்றியை அடைய முடியும் என உறுதிப்படுத்திய நாள் இது.

அமெரிக்காவில், 1890ம் ஆண்டு 8 மணிநேர வேலை, 8 மணிநேர ஓய்வு, 8 மணிநேர உறக்கம், அத்துடன் உழைப்புக்கு ஏற்ற ஊதியம் கேட்டு போராடினார்கள் தொழிலாளர்கள். இதை அமெரிக்க அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. ஈவிரக்கமற்ற தாக்குதலில் அப்பாவித் தொழிலாளர் பலர் கொல்லப்பட்டனர்.

இத்துன்பத்திலிருந்து விடுபட, முதலாளிகளை ஒழித்துக் கட்டி, தொழிலாளர்கள் ஆட்சியில் அமர்ந்தால்தான் பிரச்சனை தீர்க்கப்படும் என பொதுவுடைமைக் கொள்கையை வகுத்த 'கார்ல் மார்க்ஸ்' கூறினார். அத்துடன் 'உலகத் தொழிலாளர்களே! ஒன்று சேருங்கள்! என்ற கோஷத்தை முழக்கி, உலகெங்கும் உள்ள தொழிலாளிகளின் பல வருடகால இடைவிடாத போராட்டத்தின் பின் வெற்றி நிலைநாட்டப்பட்டது.


தொழிலாளர்கள் உழைப்பினால் தான் உலகமே இயங்கிறது. உழைப்பின் பயனை அனுபவிக்கும் முதலாளிகள், தொழிலாளர் துன்பத்தைப் பற்றி கவலைப் படுவதில்லை.

1886ம் ஆண்டு, அமெரிக்க தொழில் நகரமான நியுயோர்க், சிக்காக்கோ உட்பட்ட ஆறு நகரங்களில், 3,50,000 தொழிலாளர்கள் ஒரே நேரத்தில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இதில் 1200க்கு மேற்பட்ட நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் பங்குபற்றினர். இதனால் அமெரிக்காவின் அனைத்து செயல்பாடுகளும் ஸ்தம்பித்தன.

அமெரிக்காவின் பல்வேறு மாநிலங்களிலுள்ள தொழிலாளர் ஒன்றிணைந்து 'அமெரிக்க தொழிலாளர் கூட்டமைப்பு' என்ற இயக்கத்தை உருவாக்கி,

01/05/1886 இல் நாடாளாவிய வேலை நிறுத்திற்கு அறை கூவல் விடுத்து போராடி வெற்றி பெற்றது. இவ்வியக்கமே மேதினம் பிறக்க காரணமாயிற்று.

## செய்தித் துளிகள்...



வரலாறு எமக்குக் கற்பிக்கின்றது,
மனிதன் வரலாற்றிலிருந்து எதையுமே கற்கவில்லை என்று.

-ஹெகல்.

---

எவன் ஒருவன் தன் தற்காலிக நலனுக்காகச் சுதந்திரத்தை விட்டுக் கொடுக்கிறானோ அவன் ஒரு பொழுதும் சுதந்திரம் பெறத் தகுதியற்றவன்.

-பிராங்ளின்.

---

மக்களுக்கு எதிராகச் செயற்படும் யாராக இருந்தாலும், அவர்கள் பெயர் மக்கள் மனதிலும், வரலாற்றுச் சுவடிகளிலும் 'துரோகி' என்றே பொறிக்கப்படும்.

அரசியல் என்பது ஒரு தியாகம்.
அரசியல் என்பது மக்கள் சேவை.
தூய அரசியல் என்பது தன்னலமற்ற நிலை.

தன் உரிமையைக் காக்கப் போராடுபவன்
தேசத் துரோகியும் இல்லை,
சமூகத்தின் நலனுக்காகப் போராடுபவன்
சமூக விரோதியும் இல்லை.

தன்னை மறுசீரமைக்க முற்படும்போதுதான் ஒரு மோசமான அரசாங்கம் ஆபத்தான தருணத்தை உருவாக்குகிறது.

புரட்சியை உருவாக்குவது மோசமான அரசுகள் தான், மோசமான மனிதர்களல்லர்.

---

1858 இல் ஆஸ்திரேலிய கட்டிடத் தொழிலாளர், 8 மணிநேர உழைப்பு, 8 மணிநேர உறக்கம், 8 மணிநேர பொழுது போக்கு என்ற கோரிக்கையை வைத்து போராடி வெற்றி பெற்றனர்.

தற்போது உலகில் 80 நாடுகள் மே1 இனை தேசிய விடுமுறை நாளாகப் பிரகடனப் படுத்தியுள்ளனர்.

congee

கஞ்சி JUST ADD HOPE






WWW.CONGEEOFHOPE.ORG
REMEMBERME@CONGEEOFHOPE.ORG

CONNECT WITH US
CONGEEOFHOPE

# "கஞ்சி" பரிமாறுவோம் முள்ளிவாய்க்கால் கதை பகிர்வோம்.




கஞ்சி என்பது

## வலிமை துணிவு நம்பிக்கை

கஞ்சி பரிமாறுவோம்
சமூக நம்பிக்கையை கட்டி எழுப்புவோம்

RECIPE FOR hope

BOIL 5 CUPS OF WATER,
ADD 200 GRAMS OF RED RICE TO IT,
ADD IN SALT AS DESIRED,
AND, **JUST ADD HOPE**

1



### முள்ளிவாய்க்காலை நினைவேந்துங்கள்

மே 12 தொடக்கம் 18 வரையான காலத்தை முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை வாரமாக பிரகடனப்படுத்துங்கள்

2



### நம்பிக்கையை பரிமாறுங்கள்

கஞ்சியை சமூக நம்பிக்கையின் அடையாளமாக கருதி குடும்பத்தவருக்கும் அயலவருக்கும் இவ்வாரத்தில் ஒருவேளையேனும் பரிமாறுங்கள்.

3



### கதைகளை பகிருங்கள்

முள்ளிவாய்க்கால் கதைகளை பரிமாறுங்கள். எமக்கு இழைக்கப்பட்ட அநீதியை உரக்கச் சொல்லுங்கள்.













# வட, கிழக்கில் முள்ளிவாய்க்கால் கஞ்சி















